முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 17—7—59 | வெள்ளி | ஒலி: 13

இனியும் வெற்றி குவித்திடுவோம்; இந்தி அரவம் ஒழித்திடுவோம்!

நீட்டோலை

அன்புள்ள பொன்முடி!

1953—ஆண்டு ஜூலை—15 உனக்கு நினைவிருக்கிறதா? அந்தநாள், செந்தமிழ்த் திருநாடு செங்குருதி மணக்கும் காடாகத் திகழ்ந்தது. நீயும் நானும் இந்த நாடும் எப்படி மறக்கமுடியும்?

இன்று வெளியிலே உலவுகிற வீரர்களெல்லாம், அந்த நேரத்தில் சிறையிலே வாடிக் கிடந்தனர்.

இன்று சிலரது நினைவுநாள் கொண்டாடப்படுகிறது. அன்று அவர்களெல்லாம் சாவைப்பற்றிக் கவலைப்படாமல் போர்முனை நோக்கிப் பட்டாள நடை போட்டனர்.

மூன்று முனைகளிலே படையை மோதினேம்; தடையை இடறினேம்—அதன் விளைவு தென்னகத்திலே போர்க் குணம் கொண்ட ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று வரலாற்றிலே இடம் பெற்றேம்!

அந்த ஆண்டு ஜூலை—13 ஏரயபுரத்திலே அறிஞர் அண்ணு உள்ளிட்ட ஐவரும் கைதானுர்கள்!

ஜூலை—14-குலதர்மக் கல்வித் திட்டம் கொண்டு வந்த 'காகப்பட்டர்' வீட்டெதிரே மறியல்!

ஜூலை—15—கல்லக்குடிப் போர்ராட்டமும், ரயில் நிறுத்தப் போராட்டமும்!

ஆபத்துக் காலத்திலே நம்ப முடியாத வெறும் நடுத்தர வர்க்கத்தினரைக் கொண்டது, தி.மு. கழகம்; இவர்கள் களம் என்றுல் பின்னங்கால் பிடரியில் அடிபட ஓடுபவர்—என்று அரசியல் நிபுணர்கள் எனப் பெயரெடுத்தோர் ஆருடம் கூறினர்கள். அந்தோ, பரிதாபம்—அவர்கள் எல்லாம் முக்காடிட்டு மூலையில் ஒதுங்கிடும் விதத்திலே ஐயாயிரத்திற்கு மேற்பட்டோர் சிறையிலே அடைபட்டோம்!

தோல்வியை ஒப்புக்கொள்ளும் விதத்திலே கிரிமினல் குற்றவாளிகளை சிறையிலிருந்து வெளியேற்றி அரசாங்கம் நமது போராட்ட வீரர்களை உள்ளே அனுப்பியதைக் கண்டு உலகமே எள்ளிநகையாடிற்று!

அன்புள்ள நண்பா! இந்த உபகண்டத்திற்குப் பரத கண்டம் எனப் பெயர் வருவதற்குக் காரணம் என்று கூறுவார்களே, அந்தப் பரதன் பால பருவத்திலேயே சிங்கத்தை அடக்கி அதனேடு விளையாடியதாகக் கதை கூறுவார்கள். தவழும் பிராயத்திலே தி. மு. கழகம் மதங் கொண்ட யானையின் மத்தகத்தைக் கிழித்தது பரணி பாடுவதற்குரிய சாதனை அல்லவா?

ஜூலை—15 நாளைய திராவிட நாட்டுச் சரித்திரத்திலே மகத்தானதொரு இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்த நாளை மும்முனைப் போராட்ட நினைவு நாளாகக் கொண்டாடுகிறேம்.

அதைப்போலவேதான் ஜூலை 14—ஐ பிரெஞ்சு நாடு பாஸ்டிலி உடைந்த திருநாளை இந்த ஆண்டும் கொண்டாடி இருக்கிறது. கொடுமை முறிந்தது என்று கொட்டு முழக்கோடு ஆண்டுதோறும் விழாக் கொண்டாடுகிருர்கள், அங்கே!

1789—ஜூலை—14!

பூனைகள் புலிகளாய் மாறி புவியாள்வோர்மீது சீறியெழுந்த நாள்!

அடங்கிக் கிடந்த தேரைகள் ஆர்த்தெழுந்து படமெடுத்தாடும் நல்ல பாம்புகளை நசுக்கியெறிந்த தினம்!

ஆமைகள் அட்டலேறுகளாய் மாறின? ஒட்டிய வயிறும் உலர்ந்த கண்களும் கைக்கு எட்டிய கருவிகளைக் கொண்டு ஆதிக்க முதலையின் முதுகெலும்பை வெட்டி எறிந்தன!

ஆமாம்; அன்றைய தினம் தான் கொடுங்கோல் ஆட்சியின் கோபுரக் கலசமாய்த் திகழ்ந்த பாஸ்டிலி படுசூரணமாயிற்று!

எப்படியோ தெரியவில்லை; நம்முடைய ஜூலைப் புரட்சியும் பிரெஞ்சுப் புரட்சியும் ஓ 5 சில மணி நேர வித்யாசத்திலே நடை பெற்றிருக்கின்றன.

அன்றைய தினம்தான் இங்கு ஆச்சாரியாரின் ஆணவம் நொறுங்கிற்று! வடநாட்டு ஆதிக்கம் ஆட்டம் கொடுத்தது! கொத்தவால்சாவடி மொழியிலே கொக்கரித்துக் கிடந்த ஆசிய ஜோதியின் அடங்கா நாவும் அடங்கி ஒடுங்கியது!

அன்புள்ள பொன்முடி! வீரன் போருக்குப் புறப்படுவதற்கு முன் அவன் பெற்ற விழுப்புண் தழும்புகளை ஒருமுறை பார்ப்பான்; பழைய போர்க்கள நிகழ்ச்சிகளை நினைவு கொள்வான். அவனையுமறியாமல் புது வெற்றி பெறுவதற்கு தனி வலிவு அவன் தோள்களுக்கு வந்துவிடும்!

நண்பனே! இன்று கழகம் மீண்டும் போர்முனைக்குச் செல்ல வேண்டிய அவசியமான நிலையொன்று அவசர அவசரமாக உருவாகிக்கொண்டிருக்கிறது. இந்தியைத் திணித்துத் தமிழ்த்தாயின் முடிபறிக்கும் வேலை இப்போது மூடுமந்திரமின்றி பகிரங்கமாகவே நடைபெற ஆரம்பித்துவிட்டது. இனியும் பொறுத்திருந்தால் 'இவர் போல் கோழை இனியாருமில்லை' என்ற இழிபெயர் நமக்கு வந்துவிடும். அதனுல்தான் மாயவரம் பொதுக் குழு ஆட்சியாளருக்கு தனது தீர்மானமொன்றின் மூலம் இறுதி எச்சரிக்கை அனுப்பியிருக்கிறது. இதோ அந்தத் தீர்மானம்:

"தென்னக மக்களின் வேண்டுகோளையும், கழகத்தின் கோரிக்கை, கிளர்ச்சி ஆகியவைகளையும் பொருட்படுத்தாமல் இந்தியப் பேரரசு மறைமுகமாகவும், நேரிடையாகவும் இந்தியைத் திணித்துவரும் அக்கிரமத்தை இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், ஜனநாயகமற்ற இப்போக்கினை மாற்றிக்கொள்ளாவிடில் மொழி உரிமையைக் காக்க, கழகம் மிக் விரைவில் அறப்போராட்டத்தில். இறங்கும் என்பதை வடநாட்டு சர்க்காருக்கு மீண்டும் எச்சரிக்கின்றது."

"அறப்போராட்டத்தில்கழகம்ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தத்தை அரசியலார் உண்டாக்குவார்களேயானுல் அதில் ஈடுபடுவதற்கு ஏற்றவாறு அறப்போராட்ட வீரர்களின் பட்டியலை இப்போதிருந்தே சேகரிக்குமாறு நாடெங்கிலுமுள்ள கழக நிர்வாகிகளை இப்பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது."

அன்புள்ள பொன்முடி!

சாவென்றுல் வா, வா—என்று வரவேற்கும் வீரன் வழிவந்தவனல்லவா, நீ? நாளை அறிவகத்திலிருந்து போர் முரசு தட்டப்பட்டால் புறப்படுவதற்கு இன்றே தயாராக இரு; அறிக்கை வந்ததும் உடனே போராட்ட வீரர்களின் பட்டியலிலே உன் பெயரையும் முதலாவதாகப் பதிவுசெய்! மீண்டுமொரு ஜூலை 15-ஐ முன்னிலும் மகத்தான விதத்திலே நடத்தி வெற்றி வாகை சூடுவோம்.

அன்புள்ள,

நண்பன்.

ஆணை பிறக்குமா? அரியணை காலியாகுமா?

"நீ துரோகியாவதைவிட துரோகத்திற்குத் தெரிந்தோ, தெரியாமலோ துணையாக நிற்பது மாபெரும் குற்றம்!"

—இது பிரெஞ்சு நாட்டுப் பழமொழி.

உலக நாடுகளில் இந்த நல்லமொழி மதிக்கப்படுகிறதா; இல்லையா—என்பது நமக்குத் தெரிய வேண்டியதில்லை; ஆனால் இந்திய உபகண்டத்தைப் பொறுத்தவரையில்—நம்மை ஆளவந்தவர்களின் கூடாரத்தில் இந்த உண்மையின் வாடையே வீசியிருக்காது!

அப்படியில்லாமல், இதன் பொருள் புரிந்திருந்தால், அவர்களது மனக்கதவுதானே திறந்திருக்கும்: உள்ளே மண்டிக்கிடக்கும் நச்செண்ணங்களும், நயவஞ்சகமும் விரைந்தோடியிருக்கும்; மனச்சாட்சி தலைதூக்கியிருக்கும்; மான உணர்வை வாழவைத்திருக்கும்!

ஆனால், அந்தோ பரிதாபம்! இங்கே துரோகிகள் குறைவுதான்; ஆனால் துரோகத்திற்குத் தூணாக நிற்பவர்கள்—துணையாக நின்று வளையாது காப்பவர்கள் கோடி; கோடி! ஆகவேதான் வாடி வதங்காது வஞ்சகத்தரு வளர்க்கப்படுகிறது; ஒடி ஒதுங்காது கொடுமை புரியும் அகோரங்கள் பாலூட்டப்படுகின்றன!

ஆகவேதான் துரோகம் வளர்கிறது!

வழியிலே குறுக்கிடுகின்ற தூய நல்லிதயங்களிலே நச்சுக்கணைகளைப் பாய்ச்சுகிறது. பயணத்தின் பாதையெல்லாம் பாதம்பட்ட இடத்தையெல்லாம் விஷக்காற்றைப் பரப்புகிறது!

அதனால்தான் கேரளத்தில் கோலெடுத்தான் ஒரு காங்கிரஸ்காரன்; அவன் வால் பிடித்துக் கிளம்பியது பெரும்படை: அதை 'வாழ்க' என்று வரவேற்கிறது டெல்லி!.

அங்கே நடைபெறுவது அநீதி என்று நல்ல நெஞ்சுபடைத்தவர்கள் கண்டிக்கிறார்கள். எழுதுகோலைக் கையிலேஎடுத்துக் கண நேரம் சிந்திக்கின்ற காங்கிரஸ் அடிவருடியிடம்கூட மனச்சாட்சி வென்றுவிட்டதைக்காண்கிறோம். 'கேரளக் கம்யூனிஸ்டுகள் வீழ்க' என்று எழுதத்தான் பேனாவைத் திறந்திருப்பான்; ஆனால் 'காங்கிரசைக் கண்டிக்கிறோம்' என்று தீட்டிவிட்டது எழுதுகோல்! இல்லாவிட்டால், காங்கிரசின் கஜானாக்களின் ஒன்றான பிர்லாவின் ஏடான 'டைம்ஸ் ஆப் இந்தியா' காங்கிரசைக் கண்டிக்கும் என்று நாம் கனவிலாவது கருதியிருக்க முடியுமா?

"கேரளத்திலே கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தில் இருக்கிறார்கள் என்பதால் பெரும் பிரச்சினைகளை அலட்சியம் செய்து அபாயத்தை ஏற்படுத்தக்கூடாது! அரசியல் அமைப்புச் சட்டத்திலே இடம்பெறாத வழிமுறைகளால் அந்த மந்திரி சபையை நீக்க முயற்சிப்பது கூடாது! அதன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் எல்லாமே நியாயமாகத்தான் இருக்கட்டுமே; அதற்காக சட்டவரம்பை மீறுவது என்ன நியாயம்? ஜீவாதாரமான விதிகளை ஆட்சேபிப்பது அறிவுடைமையல்ல; அரசியல் சட்டத்திற்கே அடியோடு தவறான திருப்பம் தரப்படுவது சரியல்ல!"

—நாம் நம்பத்தான் வேண்டியிருக்கிறது. இது 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் வந்த தலையங்கத்தில் ஒரு பகுதி!

அதைப்போலவே நேர்மைக்கு இடைவெளி தந்து 'ஸ்டேட்ஸ்மேன்' என்ற தேசிய தினசரியும் தலையங்கம் தீட்டியிருக்கிறது.

"சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை நேரடி நடவடிக்கையின்மூலம் கவிழ்ப்பது நியாயம்தானா என்று காங்கிரஸ் பார்லிமெண்டரிபோர்டு யோசிக்கவில்லை. அதே நேரம் பலாத்கார முறையில் கிளர்ச்சி நடத்துவோருக்கும் ஜாடையாக ஊக்கமும், ஆக்கமும் அளித்துவருகிறது. ஜனநாயகம் இந்த நாட்டில் செத்துவிட வில்லையென்று நிரூபிக்க காங்கிரஸ் இந்தப் பிரச்னையில் புதிய கொள்கையைக் கடைப்பிடித்தாகவேண்டும்!"

—துரோகத்திற்கு மத்தியிலே இப்படி நீதிக்கு மதிப்பளிக்கும் சில எழுத்துக்கள் தோன்றுவது எதைக் காட்டுகிறது? இந்த நாட்டில் ஜனநாயகம் வாழ்கிறது என்பதை நாம் மறுக்கலாம்; ஆனால் நீதியின்குரலுக்கு ஓரளவு வரவேற்பு இருக்கிறது என்பதை நம்பத்தான் வேண்டியிருக்கிறது.

இதே ஏடுகளையே விட்டுவிட்டாலும்கூட; செம்மறியாட்டுக் கூட்டம்போல், வெள்ளைக் குல்லாய் சாய்கிற பக்கமெல்லாம் தன் உடல் முழுதையுமே சாய்த்துப் பழக்கப்பட்டவர்களின் நடுவேயும் சிலர் நிமிர்ந்து நிற்கிறார்கள். துரோகக் கூட்டத்திலேயே தூய்மையைத் தொட்டுப்பார்க்கும் துணிவுபெற்ற மனிதர்கள் சிலரையும் காணத்தான் செய்கிறோம்.

'எங்கள் வழிதான் நேர் வழி' என்று மார்தட்டுகின்ற மகானுபாவர்களின் கொடிய செயலை எடுத்துக் காட்டியிருக்கிறார், பஞ்சாப் மாநில கவர்னர் என். வி. காட்கில்:

"ஒரு சர்க்காரை மாற்றி அமைப்பதற்கு வழிசெய்ய அரசியல் சட்டம்இருக்கும்போது, பலாத்காரமோ அல்லது வேறுவிதமான நேரடி நடவடிக்கையோ செல்லாததாகும். ஒரு ஜனநாயக சர்க்காரில் சர்க்காரைப் போலவே எதிர்க்கட்சியினரும் பொறுப்போடு நடக்கவேண்டும்!"

—வளரும் அக்கிரமத்திற்கு வக்காலத்து வாங்காத மற்றுமொரு குரலும் சென்ற கிழமை எழும்பியது. மத்தியப் பேரரசின் முன்னாள் நிதியமைச்சர்— பல்கலைக் கழக மான்யக் குழுத் தலைவர் சிந்தாமணி தேஷ்முக் பத்திரிகை நிருபர்களிடம் பேசியிருக்கிறார், இப்படி;

"பொது மக்களின் கருத்துக்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றங்கள்—பாராளும் மன்றங்களில்தான் எடுத்துரைக்கப்பட வேண்டுமே தவிர, வேறு வேறு முறைகளில் அவைகளை வலியுறுத்துவது கண்டனத்திற்குரியதாகும்."

—இப்படியெல்லாம் அரசியல் உலகில் ஆண்டாண்டு காலம் அனுபவம் பெற்றவர்களின் கண்டனத்தைச் செவிமடுப்பார் யாருமில்லை, டெல்லியில்! "கேரளத்திலே இருக்கின்ற மந்திரிசபை மக்களின் எதிர்ப்பைச் சந்தித்துவிட்டது; இனி விலகத்தான் வேண்டும்! மறு தேர்தல் நடத்தத்தான் வேண்டும்!" என்று பண்டிதர் முதல், அவரது படம் மாட்டிகள் வரை ஏகக்குரல் எழுப்புகிறார்கள்.

மக்களின் எதிர்ப்பைக் காட்டும் குற்றப்பத்திரிகை ஒன்றை மேலிடத்தில் சேர்ப்பித்துவிட்டது, கேரளக்காங்கிரஸ்! ஆகவே மக்களின் எதிர்ப்பைச் சந்தித்துவிட்டது, அந்த அரசாங்கம்! உடனே மறுதேர்தல் வேண்டும்! —இந்த வாதத்தை—ஜனநாயகத்திற்குப் புறம்பான குருட்டுப் பண்பை ஏற்கத்தான்வேண்டும் என்று சீறுகிறார்கள்.

அந்தக் கொடியவர்களின் சதைக் கொழுப்பேறிய கண்களுக்குமுன் இத்திங்கள் துவக்கத்தில் அடுக்கடுக்காய்க் குவிந்துவரும் செய்திகளைக் காணிக்கையாக்க விரும்புகிறோம்.

மேற்கு வங்கத்திலே இன்று ஆட்சிபீடத்தில் இருப்பது காங்கிரஸ் சர்க்கார்தான். அதற்கு எதிராக அங்கே தோன்றியுள்ள எதிர்ப்பு இன்று புது உருவமே எடுத்திருக்கிறது, அந்த சர்க்கார் கடைப்பிடித்து வருகின்ற உணவுக் கொள்கைக்கு நீண்ட நாட்கள் இருந்துவருகின்ற எதிர்ப்பு இன்று புதிய கட்டத்தை அடைந்திருக்கிறது.

அந்த சர்க்காரின் மேல் குற்றப்பத்திரிகை ஒன்றை தயாரித்திருக்கின்றனர், இடதுசாரிக் கட்சிகள், கேரளாவில் காங்கிரஸ் செய்ததுபோலவே, அதைக் குடியரசுத் தலைவரிடம் கொடுப்பதற்கான நாள் குறிக்கக் கேட்டுக் கடிதமும் எழுதியிருக்கிறார்களாம்! அதுமட்டுமல்ல;

"மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்; அல்லது பதவியைவிட்டு வெளியேறுங்கள்."

—என்ற வேண்டுகோளுடன் அடுத்த திங்கள் நேரடி நடவடிக்கை—கேரளத்தைபபோலவே எடுப்பதற்கும் அந்தக் கட்சியினர் முடிவு செய்துவிட்டனர். இப்போதே அணிவகுத்து நிற்கின்றனர், 50,000 தொண்டர்கள்!

ஆமாம்; மேற்கு வங்கத்திலும் கேரளம் தான் உருவாகி வருகிறது. இன்னும் காங்கிரசார் துப்பாக்கி பிடிக்கவில்லை; பிணங்கள் சாயவில்லை; 'கேரளக் கொடுமை' நிகழவில்லை!

பாரபட்சமற்ற நீதி பரிபாலனம் இந்த நாட்டிலே நடக்கிறது என்றால், இப்போது மேற்குவங்க முதல்வரை நோக்கி என்ன ஆணை பிறப்பிக்கவேண்டும் — டெல்லி பீடத்தினர்!

"குற்றப்பத்திரிகை தயாராகிவிட்டது; மக்களின் எதிர்ப்புக்கு மதிப்புத் தருவது எங்கள் பழக்கம்! ஏ, காங்கிரஸ் மந்திரி சபையே! உடனே ராஜினாமா செய்! நாங்கள் மறு தேர்தல் நடத்த வேண்டும்!"

—ஆணை பிறக்குமா? அங்கிருப்போர்தான் ராஜினாமா செய்வார்களா?

அடுத்தபடியாக...

* * பீகார் மாகாணமும், கேரளத்திலே காங்கிரஸ் காட்டிய கோணல் வழி—குருட்டு மார்க்கம் செல்லலாம்.

பீகார் மாநிலத்தில், விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பலமுனை

[தொடர்ச்சி பக்கம்—5]

அந்தோ பரிதாபம்; அடிபட்ட சிற்றுயிர்கள்!

'அடிப்பியா, நொப்ப மவனே, சிங்கண்டா!' — இப்படி அடிபட்டுக் கொண்டே — கன்னம் சிவக்கச் சிவக்க அடிவாங்கிக் கொண்டே கையாலாகாத ஒருவன் கதறும் சினிமாக் காட்சி பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் சிரிப்பை மூட்டியது!

சிரிப்பை மூட்டும் அந்த சினிமாப் பாத்திரம் போன்று இப்போது அரசியல் வேடம் தாங்கி வந்து நமக்கு சிரிப்பூட்டுகிறார்கள், 'முடியாத' கட்சிக்காரர்கள்!

ஆம்; சென்னை நகரசபையில் காங்கிரஸ் தோற்றதைப் பற்றி அந்தக் கட்சிக்காரர்கள் விளக்கம் தருவது, 'அடிப்பியா, நொப்ப மவனே, சிங்கண்டா!' என்ற பாணியில்தான்!

★

"நாங்கள் நினைத்திருந்தால் தி. மு. க. மேயர் வராமல் தடுத்திருப்போம்; ஆனாலும் போனால் போகிறது என்று விட்டுவிட்டோம்!'

—என்று மதுரையில் ஒரு காங்கிரஸ் எம். பி. பேசியிருக்கிறார்!

பாவம், மேயர் தேர்தலுக்கு அவர்கள் ராஜமன்னாரை நிறுத்தி மூக்குடைபட்டதை மறந்துவிட்டார்கள்!

அந்தோ பரிதாபம், ஏதேதோ புலம்புகின்றன. அடிபட்ட சிற்றுயிர்கள்!

வெள்ளி 17—7—59 சென்னை

புதுவைத் - - தேர்தல்!

மக்கள் மன்றம் 'செல்லாத காசு' என்று காறி உமிழ்ந்து தூக்கி எறிந்தாலும்கூட, தானே உருண்டோடிவந்து பதவியின் உச்சியிலே ஏறிக்கொள்ளும் பேராசை கொண்ட இயக்கம் ஒன்று இந்த உலகத்தில் இருக்கிறதென்றால், அது இந்த பாரத நாட்டிலே பிறப்பெடுத்த காங்கிரஸ்தான். தன்னுடைய பதவிப் பித்துக்கு இடையூறாக எத்தனை தடைகள் குறுக்கிட்டாலும், அழித்தொழிக்கும் திமிரையும் அதன் கரங்களுக்குத் தந்திருக்கிறது, அவர்கள் கண்ட ஜனநாயகம்!

அவர்களது பதவிவெறி பிடித்துச் சுற்றியலையும் கண்களுக்கு முன்னே கடந்தகாலம் தெரிவதில்லை; எதிர்காலமும் புலப்படுவதில்லை! அக்கிரமத்திற்கு 'ஆரத்தி' எடுக்கும் விசாலமான உள்ளமும், கொடியவர்கள் கூட்டுறவை இரு கைகூப்பி வரவேற்கும் பரந்த மனப்பான்மையும் ஏற்பட்டு விடுகிறது! அநீதியே மூவண்ணக் கொடியாகப் பட்டொளி வீசிப் பறக்கிறது! அவதிப்படுவோர் அலறலே சுதந்திர கீதமாக—பாரதப் பண்ணாகத் திக்கெட்டும் ஒலிக்கிறது!

முடிவில்லாத் தொடர்கதையாக வளர்ந்து வருகின்ற இந்தச் சோக வரலாற்றிலே இதுவரை அக்கிரமத்தின் இலக்கணத்தை எடுத்துக் காட்டுகின்ற அத்தியாயங்கள் ஆயிரக் கணக்கிலே எழுதப்பட்டுவிட்டன. எனினும் எழுதுகோல் வற்றவில்லை; பாதிக்கப்படும் பரிதாபக் கோலத்தினரின் விழி நீரையேகூட எழுதுகோலுக்கு மசியாக இட்டு, பாகம் பாகமாக எழுதிக்கொண்டே செல்கிறார்கள்!

கேரளத்திலே இன்றையதினம் கேட்கின்ற மரண ஓலம் அந்த மகானுபாவர்களின் திருவிளையாடலின் சிறுவிளைவுதான்! 'திறனற்றவர்களின் கையிலே எங்கள் மாநிலத்தின் ஆட்சிச் சக்கரத்தை இனி ஒப்படைக்கமாட்டோம்' என்று தீர்மானித்தனர்; செயல் மூலம் நிரூபித்தனர், அந்தப் பகுதி மக்கள்! ஆனால், 'எமை விட்டொழித்து எவரைத் தேர்ந்தெடுத்தாலும் எம் இரத்தத்தில் ஊறிப்போன பதவி வெறி வாளாவிருக்குமா?' என்று வெகுண்டெழுந்த காங்கிரசார் பரப்பிய பொறுமைத் தீயிலே கருகி விழுந்தன, கூலிப் பட்டாளத்தினரின் உடல்கள் பல! நீதிக்குப் புறம்பாக—நேர்மைக்கு இழுக்காக அவர்கள் தொடங்கியிருக்கும் துரோகத் திருப்பணிக்கு அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான்; அதுதான் பதவி வெறி!

அவர்கள் ஆளும் திறனற்றவர்கள்; ஆனால் ஆளத்தான் வேண்டுமென்ற திமிர் படைத்தவர்கள்!

ஆகவே, எந்தத் தீய சக்தியும் நீண்ட நாட்கள் வாழ முடியாது என்ற உலக வரலாற்று உண்மையை இந்தத் தலைமுறையில் நிரூபித்துக் காட்டப் போகிறது, காங்கிரஸ் இயக்கம்! அதற்கு நல்லதோரு வாய்ப்பு புதுவை மாநிலப் பொதுத் தேர்தல் என்ற உருவில் இப்போது கிடைத்திருக்கிறது. ஆகஸ்ட் திங்கள் 11-ம் நாளன்று அம் மாநிலத்தில் 39 சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தல் நடைபெறும் —என இப்போது உறுதியாகிவிட்டது!

புதுவை அரசியலில் ஏற்பட்ட சூறுவளியை எவரும் மறந்திருக்க முடியாது. 'ஆட்கொண்டவர்கள் நாங்களே' என்று அரியணை ஏறிய காங்கிரசாரைவிட அந்நிய நாட்டான் ஆதிக்கமேமேல் என்று அங்கு வாழ்வோர் கருதக் கூடிய அளவுக்குக் காட்டரசன் தர்பார் நடத்தினார்கள்.

விடுதலைக்குப் பின் பதவி ஏறிய காங்கிரசார் புதுவையைத் தங்கள் சூதாட்டக் களமாக மாற்றிக் கொண்டனர். லஞ்சமும், ஊழலும் மட்டுமல்ல; உள்ளேயே ஒருவருக்கொருவர் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கழிசடைப் பண்பை வளர்த்துக்கொண்டனர்; வீழ்ச்சியுற்றனர்.

பெருந் தலைகள் படையெடுத்தன; புனித யாத்திரை செய்தனர்; காந்தியத்தை நினைவுபடுத்தினர்; காங்கிரசின் சீர்குலைவைத் தடுத்து நிறுத்தத் திரைமறைவு முயற்சியில் ஈடுபட்டனர். அனைத்தும் பாழ் என்ற நிலை அரும்பியது அப்போது!

ஆனால், இப்போது சோர்ந்து போன கரங்களை உயர்த்தி—மெலிந்துபோன உடலைத் தூக்கி - மீண்டும் அரியணை எனக்கே சொந்தம் என்று கூக்குரலிடுகிறது, காங்கிரஸ் கட்சி!

என்றோ நடந்திருக்க வேண்டிய பொதுத் தேர்தல் இது; இன்றளவு ஒத்தி வைக்கப்பட்டது, டெல்லி மூல பீடத்தினரால். புதுவை மாநிலத்தில் சட்டமன்றத்தை 1958-ம் ஆண்டு அக்டோபர் மாதம் கலைத்துவிட்டது, மத்தியப் பேரரசு. ஆனால், உடனடியாக நடைபெற வேண்டிய பொதுத் தேர்தலை நடத்தத் துணியவில்லை; முயற்சி எடுக்கவும் இல்லை! விரைவிலே தேர்தல் நடந்தால், அங்கே முறிந்துபோன காங்கிரஸ் மரம், அழிவுக்கு எருவாகிவிடும் என்ற பயம்தான் காலதாமதத்திற்குக் காரணமாக அமைந்தது. ஆறு திங்கள் கழிந்த பின்னர், 1959-ம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தனர்; ஆனால் அந்தத் தீர்மானத்தையும் செயலாக்க முற்படவில்லை. பிறகு, மே மாதத்தில் நிச்சயம் நடைபெறும் என்ற அறிவிப்புக் கிடைத்தது; அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த மௌனத்தின் பொருள் விளங்காது பாராளுமன்றத்திலே வினா எழுப்பிய நேரத்திலே, 'ஜூலையில் நிச்சயம் தேர்தல் உண்டு' என்றார் பிரதமர் நேரு.

அடுத்து வந்த அறிவிப்பின்படி ஜூலை 26-ல் பொதுத் தேர்தலை எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றத்தைத்தான் பதிலாகக் கண்டனர். அடுத்தபடியாக, புதுவை மாநில கமிஷனர் அரசியல் கட்சித் தலைவர்களை அழைத்து, ஆகஸ்ட் 5-ல் தேர்தல் கட்டாயம் நடைபெறும் என்று உறுதியளித்தார். கடைசியில் அந்தத் தேதியும் மாறி, இப்போது 11-ம் தேதி முதல் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பு கிடைத்திருக்கிறது.

இப்படிப் பலமுறை தேர்தல் தேதி ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம், அங்கே சீர்குலைந்து கிடக்கும் காங்கிரஸ் கட்சியைத் தேர்தலுக்குள் செப்பனிட்டுவிட வேண்டும் என்ற எண்ணம்தான்! அந்தச் செயலில் வெளிப்படையாகவும், தேர்தலில் வெற்றிபெற மறைமுகமாகவும் பாடுபட்டு வருகிறது, காங்கிரஸ்!

இப்போது இறுதியில், புதுத் துணிவுடன் தேர்தல் களத்திலே குதிக்கிறது. அதே நேரத்தில் தென்னகத்தின் விடுதலை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகமும் தேர்தலில் ஈடுபடுகிறது! புதுவை வாழ்கின்ற மக்களின் முன்னே மற்ற மற்ற அரசியல் கட்சிகள்கூட வாக்குரிமை கேட்டு வரலாம்!

ஆனால், அவர்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறார்கள் என்பதிலேதான் அவர்களது எதிர்காலமே அடங்கியிருக்கிறது!

நேற்றுவரை வேற்று நாட்டானின் பாதத்தடியிலே அடிமைகளாக நசுக்குண்டு கிடந்தவர்கள், மீண்டும் வட நாட்டானின் பிடியிலே தங்கள் கழுத்தைக் கொடுக்கப் போகிறார்களா; அதற்கு வழியமைத்துக் கொடுக்கும் காங்கிரசுக்கு வாக்களிக்கப் போகிறார்களா? அல்லது, வளைத்திருக்கும் கொடிய கரங்களிலிருந்து விடுபட—வஞ்சிக்கும் வடக்கின் பிடியிலிருந்து தப்ப விடுதலைப் பெரும்படையாக உருவாகிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்கப் போகிறார்களா? அல்லது மற்ற கட்சிகளை வரவேற்று தங்கள் வாக்குச் சீட்டுகளின் மதிப்பையே இழந்துவிடப் போகிறார்களா?

ஓட்டுச் சாவடிக்குச் செல்லுமுன் நாட்டு நிலையைக் கணநேரம் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

புதுவை மாநில வாக்காளப்பெரு மக்களே! உங்களுடைய விலைமதிப்பற்ற வாக்குகளை விழலுக்கிறைத்த நீராக்கி விடாதீர்கள்! சீர்திருத்த முகாமாம் — செயல்வீரர்களின் பாசறையாம் — திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்து ஆதரியுங்கள்! ஃ

அடுத்த ஒலியில்

'மாயவரம் பொதுக்குழு'

கலப்படம்

★ கோயில் — மூன்று கோணங்கள்! ★

மந்திரி பக்தவத்சலம்:

பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்ட ஐயன், அரங்கநாதனைக் கண்டேன், சீரங்கத்தில்! அவர் சமீபத்தில் எரிந்து போனது உங்களுக்கு எல்லாம் தெரியும்—அபச்சாரம். அபச்சாரம். அவர் தன்னைத்தானே எரித்துக் கொண்டாராம்! தன்னுடைய சக்தியை உலகிற்குக் காட்டினராம்!—இது என் கருத்து மட்டுமல்ல; பக்தகோடிகளின் கருத்து. சந்தேகமிருப்பவர்கள் இந்த வாரத்து 'இந்து'ப் பத்திரிகையைப் புரட்டிப் பாருங்கள்.

நான் 'புது' அரங்கநாதனைத் தரிசித்ததுதான் தாமதம். உடனே பத்திரிகைகளிலெல்லாம் அது பிரசுரமாயிற்று. 'சுதேச மித்திரன்'—எனும் பத்திரிகையில், 'அரவணையில் பள்ளி கொண்ட அரங்கனின் திவ்ய சேவை'—என்று அடுக்கு மொழியில் அடுக்கியிருந்தது. 'அசல் வண்ணம் அங்கு கண்டு அமைச்சரின் 'அகமகிழ்வு' — என்று அழகு மொழியில் எழுதியிருந்தது என் உள்ளத்தைக் கவர்ந்தது. (ஆனால் அசல் வண்ணம் என்று எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை.) அதையே இன்னும் பாக்கி ஏன் விட்டு வைத்திருக்கிறார்கள்? 'அசல் அண்ணம் அங்கு அண்டு அமைச்சரின் அகமகிழ்வு'—என்று போட்டிருந்தால் அழகாக இருக்காதா? அடுக்கு மொழியின தரம் இன்னும் உயர்ந்திருக்காதா?

'ஆமாம்; நீங்கள் அடுக்கு மொழியின் எதிரிகளாயிற்றே!'—என்று என்னையும் அந்தப் பத்திரிகையையும் வினவலாம். இந்த வினவை எழுப்பியவர் நம் கட்சிக்காரராய் இருந்தால் அவருக்குக் காதோடு காதாக நான் சொல்வேன். அட, அடுக்கு மொழி அடுத்தவன் சொத்தாய் இருக்கிறவரைக்கும் தானப்பா நமக்கு எதிரி! நம்மால் (எக்கஷ்டப்பட்டாவது) அது கையாளப் பட்டால் எதிரியில்லை!

இதைவிட எல்லாம் எனக்குப் பிடித்தமான பத்திரிகைச் சேதி, வடகலை — தென்கலை பற்றிய என் கருத்தை பெரிய எழுத்தில் போட்டதுதான். அது என் மனதில் ஒரு மரக்கால் பாலை வார்த்த மாதிரி இருந்தது. காரணம், 'வடக்கு—தெற்கு'—எனப் பேசும் தி. மு க. க்காரர்—களுக்கு அது ஒரு சவுக்கடி மாதிரி எனக்குத் தோன்றியது; 'பிரிவினை கூடாது; பிரிவினை கூடாது!'—என்று அந்த வடகலை—தென்கலை கூட்டத்தில் பேசும் போது, ஆகா, அந்த தி. மு. க.—க்காரர்களை ஒவ்வொருவராக எடுத்து ஓமகுண்டத் தீயில் போட்ட மாதிரி இருந்தது.

அங்கு நடந்த அவலச் செய்தி என்னவென்று கேட்டால், சாமி பெயரால் ஒருவர் சர்க்காரிடம் உதவி கேட்டதுதான்! — நானு மாட்டிக் கொள்பவன்? எதை எதையோ பேசித் தப்பித்தேன்! ஏதேது, இந்தப் பக்தர்களே சாமியைப் பிச்சைக்காரர் ஆக்கி விடுவார்கள் போலிருக்கிறதே! 'சாமிரிப்பேர் செலவு'க் கெல்லாம் எடுத்து எடுத்துக் கொடுக்க சர்க்காரில் என்ன கொட்டியா கிடக்கிறது?

* * *

பேஷ்கார் ராமசாமி ரெட்டியார்

இதென்ன முன்னாலும், பின்னாலும் வால்கள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன என்று கேட்கிறீர்களா? பின்னால் ஒட்டிக் கொண்டிருப்பது என்னவென்று தெரியும். அது சாதிப் பெயர்!

முன்னால் ஒட்டிக் கொண்டிருப்பதற்குப் பொருள் தெரியவில்லை. இருந்தாலும் ஏதோ திருப்பதி தேவஸ்தானத்துப் 'பெரியவாள்' கொடுத்த வால்!—அதை ஒட்ட வைத்துக் கொண்டிருக்கிறேன். தர்மகர்த்தாவைக் குறிப்பதற்குக் கொடுத்த பெயர்தானே என்னும் சந்தேகம் எல்லா நிர்வாகத்தையும் நானே கவனிக்கும்போது தோன்றுகிறது.

என் நிர்வாகத்திலேயே பெருமைப்படத் தக்க விஷயம், மந்திரி ஒருவரை என் முன் கையேந்தச் செய்த செயல்தான்!

என்ன விழிக்கிறீர்கள்? — ஒரு மாநிலத்தின் அமைச்சர் என் கையை எதிர்பார்த்து நின்றார். ஆம், எங்கள் திருப்பதி ஆண்டவர் சார்பாக மந்திரி பக்தவத்சலத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் செக் கொடுத்தோம்! இதன் மூலம் இந்திய உபகண்டத்திலேயுள்ள 'பணக்காரச்சாமி' எங்கள் சாமிதான் என்பதை நிரூபித்துவிட்டோம்.

கொடுத்தது யாருக்கு? வறுமைக் கொடுமையால் வாடும் ஏழையருக்கா? இல்லவே இல்லை!

அப்படிக் கொடுத்திருந்தால், எங்கள் மலைக் கோயில் வாசலில் அத்தனை பிச்சைக்காரர்கள் ஏன் இருக்கப் போகிறார்கள்? அப்படியானால் எங்களிடம் கையேந்திப் பிச்சை பெற்றவர் யார்?

சீரங்கம் சாமி!

இரண்டு சாமிகளும் ஒரே விஷ்ணு சாமியாக இருக்கும் போது ஏன் ஒன்று பணக்காரனாகவும் இன்னொன்று ஏழையாகவும் இருக்கிறது? ஒரே சாமிக்குள்ளேயே ஏனிந்த ஏற்றத் தாழ்வு? — என்று நீங்கள் கேட்கலாம். என்ன செய்வது? அதெல்லாம் 'அவன்' எழுத்து! அன்று எழுதியதை யாரே இன்று அழித்து எழுத வல்லார்? நிற்க.

நன்கொடை கொடுத்ததற்காக மந்திரி என்னைப் பாராட்டும் போது — எங்கள் தர்மகர்த்தா இனத்தையே பாராட்டும்போது ஆ கா... நான் புளாங்கிதம் அடைந்தேன். நாட்டில் தர்மம் நிலைக்கப் பாடுபடும்—கோயிலில் தர்மம் விளக்கப் பாடுபடும் கர்த்தாக்களாகிய நாங்கள் பெருமைக் குரியவர்கள் — பாராட்டுக் குரியவர்கள்.

உமாபதி (நாய்க்கர்)

நானும் அதே தர்மகர்த்தா வேலையில் இருந்தவன் தான். தர்மத்தைக் கோயிலில் நிலை நாட்ட வேண்டியவன் என்று கருதப்பட்டவன்தான். உத்தமன்-யோக்கியன் என்று எல்லோராலும் பாராட்டப்படவேண்டிய நிலையிலிருக்கும் தர்மகர்த்தா இனத்தைச் சேர்ந்தவன். ஆனால் 'அந்த இனத்தின போக்கே அப்படித்தான்' என்று மக்கள் தூற்றுகிற அளவுக்குப் போலீஸ் என்மீது குற்றச்சாட்டு ஒன்றைச் சாட்டியுள்ளது. அதன் கருத்து வருமாறு:

'செங்கற்பட்டு நகரிலுள்ள கோவிலில் தர்மகர்த்தாவாக சில காலம் பணியாற்றினர் உமாபதி (நாய்க்கர்)!

'அந்தக் கோயிலுக்கு மணியடிக்க வரும் குருக்கள் வீட்டில் மங்களம்மாள் என்னும் பெண் ஒருத்தி இருந்தாள். மணமாகாத அவளைக்கண்டு மோகம் கொண்டார் தர்மகர்த்தா!

'3—1—58-ல் ஆருத்திரா தரிசனத்தின் போது தர்மகர்த்தா மங்களம்மாளின் இளம் நெஞ்சிலே சினிமாப் பார்க்கும் ஆசையைத் தூண்டிவிட்டு, சினிமாவுக்கு அழைத்துச் சென்றார். செல்லும் வழியில், தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார், பணப்பையை வீட்டில் மறந்து வைத்துவிட்டேன்—என்று கூறியபடியே!

'வீட்டிற்குள் நுழைந்ததும், கதவு தாழ்ப்பாள் போடப்பட்டது. மங்கையின் கற்பு சூறையாடப்பட்டது.

'சில நாட்கள் அந்தப் பெண் இங்குமங்கும் கூட்டிச் செல்லப் பட்டாள். அவமானச் சின்னமாம் பொட்டும் கட்டப்பட்டது, தர்மகர்த்தாவின் கையினால்!

'உருண்டோடின, நாட்கள்! மங்களம்மாள் கருவுற்றாள்! குழந்தைக்குத் தாயாகும் நிலையடைந்தாள்!

'இதைக் கண்ட தர்மகர்த்தா அவளைக் கைவிட்டோடினர்! கண்ணீர் சிந்த, செங்கற்பட்டு வந்தாள், அந்தப் பெண்!

'சொந்த ஊர் வந்ததும், மங்களம்மாள் நொந்த கதைக்குக் காரணகர்த்தா, கோயில் தர்மகர்த்தா என்று பொதுமக்கள் உணர்ந்தார்கள்; போலீஸ் உணர்ந்தது.'

தர்மத்தைக் கட்டி வளர்க்க வேண்டிய தர்மகர்த்தா, அதர்மத்தைத் தட்டிக்கொடுத்து வளர்த்ததாக என்மேல் குற்றம் சாட்டுவது சரியல்ல என்று வாதாடினேன்.

என்றாலும் எனக்குக் கிடைத்தது சிறைத் தண்டனை!

15 மாதக் கடுங்காவல் தண்டனை!

— திருப்பூர் அடியார்



சிலையும்... ...நிலையும்!

'கேரளத்து இன்புளூயன்சா'; கங்கைக் கரையோர நாடுகளிலே!

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

விற்பனைவரி விதிக்கப்படுவதற்கு அங்கே எதிர்ப்பு! ஜூலை முதல் நாள் அமுலுக்கு வந்த அந்தப் பொல்லாத வரியை எதிர்த்து தலைநகர் பாட்னு முழுதும் கடையடைப்பு நடத்திற்று! மக்கள் வெள்ளமாகக்கூடி தங்கள் வெறுப்பை ஆட்சிபீடத்திடம் காட்டிக் கொண்டார்கள்.

"பீகார் சர்க்கார் உடனே புதிய விற்பனை வரியை வாபஸ்பெற வேண்டும்; மக்களுடைய நியாயமான கோரிக்கைக்குச் செவி சாய்க்கவேண்டும்! சர்க்கார் இதில் இம்மியளவு தவறுமேயானுல், எங்கள் அடுத்த எதிர்ப்புத்திட்டம் 'நேரடி நடவடிக்கை'தான்!"

— பாட்னு நகரில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், விற்பனை வரி எதிர்ப்புக் கமிட்டித் தலைவர் சுராஜ் நாராயணசிங் இப்படி சவால் விட்டிருக்கிறுர், சர்க்காரை நோக்கி!

நேரடி நடவடிக்கை தான்— கேரளத்தைப் போலவே — அடுத்த திட்டமாம்; என்ன பதில் என்று காங்கிரஸ் ஆட்சி பீடத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறது, அந்த மாநிலத்தின் எதிர்க்கட்சிகள்!

இது பீகார் மாகாணத்தில் மட்டும் தெரிந்து மறைந்து விடக்கூடிய செய்தியல்ல. மின்சார வேலைப்பாடுக்களைபோல் டெல்லியைத் தாக்கியிருக்கிறதாம் இப்போது! மாற்றுரல்ல; தாய் நாட்டுப் பண்புள்ளவர்கள் அங்கிருப்பவர்கள் என்ருல் என்ன செய்திருக்கவேண்டும? கேரளத்திற்கு ஒரு நாக்கு; மற்ற திசைகளுக்கு வேறு நாக்கா? துரோக எண்ணம் இல்லாதிருந்தால் இந்நேரம் கட்டளை பறந்திருக்கவேண்டாமா? "நேரடி நடவடிக்கைக்கு உள்ளாகப்போகும் காங்கிரஸ் பிரதிநிதி சபையே! உடனே ராஜினுமா செய்! அங்கு மறு தேர்தல் நடத்தவேண்டும்!" என்று—ஆணை பிறக்குமா? அங்கிருப்போர்தான் ராஜினுமா செய்வார்களா?

இனி அடுத்த செய்தி...

☆ இந்த இக்கட்டான நிலைமை எப்போதும் தீராத தலைவலி படர்ந்த பம்பாய் மாநிலத்தையும் பிடித்து விட்டது; மேலிடத்தாரின் 'நாணய'த்தைப் பரீட்சிக்கும் நல்லதொரு வாய்ப்பும் உலகப் பார்வையாளர்களுக்கு ஏற்பட்டுவிட்டது!

'சம்யுக்த மகாராஷ்டிரம், கேட்டு, முடிவில்லாப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற சமிதியினர் தங்களுடைய தாக்குதலை இப்போது கேரள பாணியில்துவககி விட்டார்கள்! காங்கிரஸ் சாந்தி கொல்லும் கொடுமையைத் தங்கள் புதிய எதிர்ப்புக்குக் காரணமாகவும காட்டுகிருர்கள்.

இருமொழி பம்பாய் மாநிலக் காங்கிரஸ் ஆட்சிமக்களின் ஏகோபித்த பாராட்டுதலோடா இன்று இயங்கி வருகிறது? இல்லவே இல்லை! பொதுத் தேர்தலிலே சம்யுக்த மகாராஷ்டிர சமிதி பெருவெற்றி அடைந்தது. நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தல்களிலே எல்லா இடங்களிலும் காங்கிரஸ் முறியடிக்கப்பட்டது. வெற்றி வாகை சூடிய சம்யுக்த மகாராஷ்டிர சமிதியினர் எதிர்ப்போரின் தியாகிகளின்சவங்களைக் குவித்துக்காட்டி — காங்கிரஸ் ஆட்சியிடம் தங்களுக்குள்ள எதிர்ப்பைக் காட்டிக்கொண்டு வருகின்றனர்.

இப்போது, சென்ற 5-7-59 அன்று கூடிய சமிதியின் பார்லிமெண்டரி போர்டு கேரளத்தை நினைவுபடுத்தி. எதிர்ப்பிலே புதுப்பாணியைக்கையாள்கிறது.

"மக்கள் எதிர்க்கிருர்கள்; அதனுல் ராஜினுமா செய்யத்தான் வேண்டும் — என்று கேரளத்திற்கு யோசனை சொல்வது போலவே ஏன் பம்பாயிலும் கடைப்பிடிக்கக்கூடாது? நீண்ட கால எதிர்ப்புக்கு மதிப்பளிக்கும் பம்பாய் மாநில அரசும் உடனே ராஜினுமா செய்ய வேண்டாமா? மறு தேர்தல் நடத்த வேண்டாமா?"

—என்று கேட்கிறது, அந்த சமிதியின் கூட்டம். இந்த வாதத்திலே தவறு இல்லை என்று சொல்ல முடியுமா, வஞ்சகக் கருத்து கொண்ட மத்திய அரசும், அதன் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டும்? கடமைக்குத்தான் முதலிடம் — என்று கட்சிப் பிரச்சாரத்தை செய்தவர்கள் அவர்களானுல், என்ன செய்திருக்க வேண்டும்? "இத்தனை எதிர்ப்புக்குப் பிறகும் ஏன் இருக்கிருய் மந்திரி சபையே? உடனே ராஜினுமா செய்து விடு!" என்று தாக்கீது அனுப்ப வேண்டாமா?

—ஆணைபிறக்குமா? அங்கிருப்போர்தான் ராஜினுமா செய்வார்களா?

**** இப்படியாக மாநிலங்களைப் பொறுத்தவரை தகராறுகளை விட்டுத்தள்ளுவோம்என்ருலும், இப்போது மத்திய அரசுக்கு எதிராகவே நீட்டப்படஇருக்கிறது ஒரு நீண்ட குற்றப் பத்திரிக்கை!

கேரள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சங்கர் கொடுத்தகுற்றப் பத்திரிக்கையை குடியரசுத் தலைவர் பெற்ருர்; இப்போது அதே காங்கிரசில் ஆசிய ஜோதியாம்; அறிவுத் திறன் படைத்தவராம் பண்டித நேரு அவர்களின் சர்க்காரின் மேல் சுமத்தப்பட்ட குற்றப்பட்டியல் இடம் பெறப்போகிறது!

"பனிரெண்டுஆண்டுகள் உருண்டோடி விட்டன, சுதந்திரம் கிடைத்து! ஆனுல் காஷ்மீர் பிரச்சினை 'நித்திய'கன்னியாகவே இருந்துவருகிறது! இந்திய — பாக்கிஸ்தான் எல்லையிலே நள்ளிரவிலும், நாடுறங்கும் நேரத்திலும் 'திடீர், திடீர்' என்று எழும்பும் துப்பாக்கிச் சப்தங்கள் நிற்கவில்லை. இந்தக் கேவலத்தை ஒடுக்க லாயக்கற்றுவிட்டது, இந்திய அரசு!"

"கோவாவிலே விடுதலை விரும்பிகள் கொட்டிய ரத்தம்வீணுகவே போய்விட்டது உலக நாடுகளின் விடுதலைக்கு வக்காலத்து வாங்கும் நேரு சர்க்கார் அந்தப் பகுதி விடுபட என்ன செய்தார்?

"கள்ள மார்க்கெட்காரர்களைக் கழுவிலேற்றுவேன் என்று மார் தட்டியமாவீரர்கள்இன்று பணப்பூதங்களின் பாக்கெட்டுகளில் அடைக்கலம் புகுந்து விட்டார்கள்! பதுக்கல் பேர்வழிகள் பகற் கொள்ளைக்காரர்களைப்போல் பவனி வருகிருர்கள்! இந்தக் கொடுமையைத்! தீர்க்க வகையற்றுவிட்டது 'சோஷலிசம்' பேசுகின்ற அரசு!

"இரும்புப் பெட்டிகளிடம் சரணுகதி அடைகின்ற மத்திய அரசின் கண்டிக்கத்தக்கப் போக்கினுல் கோடிக் கணக்கிலே கொள்ளையடிக்கும் 'கௌரவத் திருடர்'கள் நாட்டிலே மலிந்துவிட்டார்கள்! அதோடு 287 கோடி ரூபாய் வருமான வரியையும் வசூலிக்கத் திராணியற்றுவிட்டது இந்திய அரசு!

—இப்படி நீளுகின்ற அந்தப் பட்டியல் 21 பயங்கரமான குற்றச்சாட்டுகளைக் கொண்டிருக்கிறது. அதைத் தயாரித்த எஸ். எம். பானர்ஜி என்ற டெல்லிப் பாராளுமன்ற சுயேட்சை உறுப்பினர், பல்வேறு கட்சித் தலைவர்களின் கையொப்பங்களை அதிலே பெற்றுவிட்டார்!

இன்றே, நாளையோ அது இந்தியத் தலைவரிடம் தரப்பட்டுவிடும். என்ன நடக்கும் அடுத்தபடியாக?

கேரள அரசுபற்றி தந்த குற்றப் பத்திரிகை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டு,விட்டது! 'ராஜினுமா செய்ய வேண்டும்' என்ற யோசனையும் தரப்படுகிறது!

கேரளத்தைக் கவனிக்கின்ற கண்கள் இப்போது குருடாகிவிடவில்லை! அந்தச் செய்திகளைக் கேட்கின்ற செவிகள் இப்போது அடைபட்டுப் போய்விடவில்லை!

என்ன நடக்கும்?

இந்த நாட்டின் அமைச்சர்களை அதிகாரிகளை — சாதாரண பிரஜைகளை—எவராலுைம் அப்படியே தூக்கி, நாட்டைச் சூழ்ந்திருக்கும் பெருங்கடல்களில்வீசியெறியும் சக்தியை சட்டப்படி பெற்றிருக்கிற அந்த ஒரே மனிதர்— சர்வ வல்லமை படைத்த குடியரசுத் தலைவர் — மக்களின் குற்றச்சாட்டுகளைப் பெற்றவுடன் என்ன செய்யவேண்டும்?

செய்வாரா?

ஆணை பிறக்குமா?

அங்கிருப்போர் தான் ராஜினுமா செய்வார்களா?

—சொர்ணம்

கேள்விக்கணை பாயுது: கவசமில்லை, தாங்கிட!

★

'அரையணு கார்டு முக்காலணு!

"அடுக்குமா? வெள்ளையர் அக்கிரமம் பார்த்தீரோ, பாரத தேசத்தவரே! இந்த அநியாயம் கேட்டால் பூமி பிளந்துவிடாதா? பூகம்பம் பிறக்காதா? பொங்கிடாதோ கடல்? என்ருலும் தூங்குவது ஏனே நீங்கள்? துடிப்புக்கொள்வீர்; ஆங்கில ஆதிக்கத்தைத் தூர விசி எறிவீர்!"

—என்று கூட்டத்தில் கூடி நின்று கூவினுர்கள் காங்கிரஸ்காரர்கள் அன்ரெரு நாள்!

★

காலம் மாறிற்று!

காங்கிரஸ் கையில் செங்கோல் வந்தது.

காங்கிரஸ் சொன்னதுபோல் பாலும்தேனும் பெருகி ஓடவில்லை!

பாலின்றி அழும் பச்சிளம் குழந்தைகளும், அதைப் பார்த்துத் தேம்பி அழும் தாய்மார்களும்தான் தெருக் காட்சிப் பொருட்களாயினர்.

வறுமையோ கறுந்தேளெனக் கொட்டுகிறது! வரிச்சுமையோ முதுகெலும்பை ஒடிக்கிறது! வாடுகிருர் மக்கள்; வாய்விட்டுக் கதறுகிருர்! இந்த நிலையில், ரயில்வே பிளாட்பாரம் டிக்கட் கட்டணத்தை ஏற்றினர், காருண்யமிக்க காங்கிரஸ் சர்க்கார்!

★

பொதுமக்கள்: ஓய்! காங்கிரஸ்! வெள்ளையன் காலத்தில் தபால் கார்டு விலை ஏறியபோது கதறினீரே! ஏனய்யா பிளாட்பாரம் டிக்கட் கட்டணத்தை இப்போது ஏற்றினீர்?

காங்கிரஸ்: ....

பொதுமக்கள்: அட, காரணமாவது சொல்லையா!

காங்கிரஸ்; ....

★

"...உண்மைதான். சில சமயங்களிலே மக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடிவதே இல்லை!...."

—ஜூலை 9-ந் தேதி நடந்த தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு காங்கிரஸ் நகரசபைத் தலைவர் பேச்சு.

9

விறகுவெட்டியின் கோலத்திலிருந்த இருங்கோவேளின் எடுப்பான தோற்றத்தை அவள் அடிக்கடி பார்க்கக் கூடாதென்று கண்களைத் திருப்பிக்கொள்ள முயற்சித்தாலுங்கூட தோல்வியே கண்டாள், முத்துநகை.

அவனது உயர்ந்த திடமான தோள்களும் அகன்று விரிந்த மார்பகமும் அவளைப் பெரிதும் கவர்ந்தன. அப்பப்பா—எவ்வளவு பெரிய விழிகள் அவனுக்கு! அந்த விழிகளில் நிலைக் கண்ணாடிபோல் தன் முகத்தைப் பார்த்துப்பொட்டிட்டுப் பொலிவு செய்து கொள்ளலாம் போலும் என எண்ணிப் பூரிப்படைந்தாள்.

அவனருகே அவள் நிற்கும் போது மலையடிவாரத்தில் ஒரு மான் குட்டி நிற்பதுபோல் இருந்தது. ஆலமரத்தின் பெருங்கிளையொன்றில் கிள்ளை உட்கார்ந்திருந்தால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கும், அவன் அவளை வாரியெடுத்துக் கொஞ்ச ஆரம்பித்தால்!

நல்லவேளை; அப்படியொன்றும் நடந்துவிடவில்லை. உதட்டில் அவன் உண்டாக்கிய வலியைப் பொறுத்துக்கொண்டு மண்டபத்திலிருந்து நகரத் தொடங்கினாள்.

"என்னய்யா கிளம்பிட்டே! இருய்யா கொஞ்சம்!" என்று இருங்கோவேள் அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

"உஸ்! ஊஹூம்!" என்று சைகை செய்துவிட்டுக் கையைத் திமிரி விடுவித்துக்கொண்டு அவள் புறப்பட எத்தனித்தாள்.

"ஆகூம்! அதுதான் 'நடக்காது! விடமாட்டேன்'' என்று சிரித்தவாறு கத்திக்கொண்டே இருங்கோவேள் தன் முரட்டுக் கரங்களால் அவளை அலக்காய்த் தூக்கிக்கொண்டு கரகரவென்று தன்னைத்தானே மூன்று சுற்று சுற்றிக்கொண்டு மண்டபத்துக்குள்ளே கொண்டுபோய் அவளைத் தொப்பென்று போட்டான்.

கிறுகிறுவென்று சுற்றிய காரணத்தால் அவள் கண்ணைத் திறக்க முடியாதபடி மயங்கிக் கிடந்தாள். அவனுக்குப் பயம் ஏற்பட்டுவிட்டது.

"முத்தூ! முத்தூ! அய்யா! அய்யா!!" என்று கூப்பிட்டுப் பார்த்தான்.

குளத்திற்கு ஓடி தண்ணீர் கொண்டுவந்து தெளித்தான். அவளைத் தன் மடியில் கிடத்திக்கொண்டு நெஞ்சைத் தடவிக் கொடுத்தான். அப்போது அவனுக்கு உடம்பெல்லாம் சூடேறி உதறியது! குளிரில் தான் உடம்பு நடுங்கும்! இப்படிப்பட்ட சூட்டிலும் உடம்பு நடுங்குமென்பதை அவன் உணராதவனல்ல. மயங்கிக்கிடந்தவள் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

விறகுவெட்டி, தன்னை ஆண் என நம்பித் தாராளமாகப் பழகுவது நிலைமையை எங்கேயோ இழுத்துச் செல்கிறது என்பதை அவள் புரிந்துகொள்ளாமல் இல்லை. அந்த நிலையை அவளால் விரும்பவும் முடியவில்லை. வெறுக்கவும் இயலவில்லை தலைப்பாகைத் துணியால் நெஞ்சை இழுத்து மூடிக்கொண்டு அவனை விட்டுக் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்தாள்.

அவன் தன்னைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்கக் கூடுமோ என்ற பயமும் சந்தேகமும் அதிகரித்தது. அவன் முகத்தைக் கவனித்தாள். அவ

★ தண்டனை ★

னது வீரம் செறிந்த முகத்திலேயிருந்து எந்தக் குறிப்பையும் அவளால் கண்டுகொள்ள முடியவில்லை. ஈட்டிகள் விழிகளுக்கு நேரே பாய்ந்து வந்தாலும் இமை கொட்டுவது கோழைத்தனம் என்று வீரத்துக்கு இலக்கணம் வகுத்துக்கொண்டுள்ள தமிழ்ப் பெருங்குடியில் பிறந்தவன்தானே இருங்கோவேளும்! அவனது முகத்தில் அவ்வளவு சீக்கிரம் உணர்ச்சிபாவ மாறுதல்களைக் கண்டறிந்துவிட முடியுமா என்ன?

"எப்படியிருக்கு? இன்னம் மயக்கம் இருக்கா?" எனக் கேட்டான் இருங்கோவேள்.

"இல்லை" என்ற பொருளில் தலையசைத்தாள் முத்துநகை.

"மயக்கம் ஆரம்பமாகியிருக்கிறது உள்ளத்தில்!" என்று அவள் சொல்லவில்லை. கண்கா சொல்லாமலும் இல்லை. அவனும் அதைக் கண்டு பிடித்துவிட்டான் என்றே தோன்றியது.

"பிறவியே ஊமைதானா?" என்று கேட்டான் அவன்.

உடனே அவள், ஒரு ஓலையில் கிறுகிறுவென்று எழுதி அவனெதிரே நீட்டினாள். தாமரையிடம் எழுதிக் காட்டினாளே; அதே வாசகம்தான்!

"என்ன அப்படிப்பட்ட லட்சியம்?" அறிந்துகொள்ள ஆவல் கொண்டான் இருங்கோவேள்.

இன்னொரு ஓலையில் எழுதினாள். அவள் எழுதும்போது அந்த விரல்கள் ஆடும் அழகு நடனத்தைத் தன் கண்களால் பருகி மகிழ்ந்தான் இருங்கோவேள். ஓலையை அவனிடம் கொடுத்தாள்.

"என்ன இது பொம்பளை கையெழுத்தாட்டம் இருக்கு! எங்கே விரலைக் கொடு! அட ஆமாம்—விரல்கள்கூட பயத்தங்காய் மாதிரிதான் இருக்கு!" என்று கிண்டல் செய்தவாறு அவள் விரலைக் கடித்து விட்டான், இருங்கோவேள்.

அவள் வலி பொறுக்கமாட்டாமல் துடித்தாள். ஆனாலும் கோபம் வரவில்லை. கடிபட்ட விரலைத் தன் வாயில் வைத்து ரத்தங் கட்டாமல் நாக்கால் நனைத்துக்கொண்டாள்.

அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது; அவன் வாயின் எச்சில் பட்ட விரலைத் துடைக்காமல் தன் வாயில் வைத்துக் கொண்டோம் என்பது! ஏனோ அது கூட அவளுக்கு வெறுப்பு எதையும் உண்டாக்கவில்லை. அவள் செய்கைகளை ஜாடையாக கவனித்துக்கொண்டே அந்த ஓலையைப் படித்தான் இருங்கோவேள்.

"என் லட்சியம் நிறைவேறுகிற சமயம் நான் பேச ஆரம்பித்துவிடுவேன். அப்போது சந்திக்க நேர்ந்தால் விபரம் கூறுகிறேன். அதுவரை என்னைத் தொந்திரவு செய்து என் லட்சியம் பற்றிக் கேட்கவேண்டாம்."

—என எழுதப்பட்டிருந்தது.

படித்து முடித்துவிட்டுத் தலை நிமிர்ந்தான். அவள், கடிபட்ட விரலைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அது ரத்தங் கட்டி வீங்கிவிட்டது. அதை அவனும் பார்த்துவிட்டான்.

"அடடா! வீங்கிப் போச்சா! இருய்யா; இதோ ஒரு மருந்து கொண்டு வர்ரேன்!" என்று அவன் அவசர அவசரமாக மண்டபத்தை விட்டு விரைந்து சென்றான்.

அவன் தேடிய பச்சிலை கிடைக்கவில்லை. எப்படியும் பச்சிலையைப் பறித்துச் செல்லவேண்டுமென்ற ஆவலுடன் சிறிது நேரம் தேடினான்.

சோழ நாடு—கரிகாலன்--பழிக்குப்பழி—போன்ற முணுமுணுப்புகள் அவனை விட்டுக் கொஞ்ச நேரம் விலகியிருந்தன. ஏதோ ஒரு தெளிவில்லாத உணர்ச்சி அவனை ஆட்டிப் படைத்தது. அவள் குளிக்கும்போது அவன் அவளைப்பார்த்துவிட்டான். அப்போதே அவன் உள்ளம் உருக ஆரம்பித்துவிட்டது. அவன் சமைத்த பொங்கலையுண்ணும் சமயத்தில் அவளை மிக அருகே அவன் கண்டான். பிறகு அவளைத் தூக்கிக்கொண்டு ஆடினான். அவளுக்கு மயக்கம் வந்ததும்.... அவள் நெஞ்சாங் குழியில் தடவிக் கொடுக்க ஆரம்பித்து........ சே சே சே....ஒரு மன்னன் என்பதையே ஒருக்கணம் மறந்துவிட்டான்.

பச்சிலைக்காக அவன் கால்கள் நடந்தன. பசுமையான எண்ணங்களோ அவனை எங்கெங்கோ இழுத்துச்சென்று காதல் சூறாவளியில் சுருட்டிப் போட்டன. விடுவித்துக்கொள்ள முடியாமல் தத்தளித்தான். அவனுக்கு இந்தச் சுவையே அனுபவமில்லையென்று கூறிவிட முடியாது.

மிக இளமைப் பருவத்திலேயே அவனுக்குத் திருமணம் நடந்தது. தன் மாமன் மகள் பெருந்தேவியைத்தான் அவன் ஆசைப்பட்டு மணம்புரிந்துகொண்டான். இருவரும் இரண்டு மூன்று ஆண்டுகள் காதற் பெருவெள்ளத்திலே நீந்திக் குளித்தனர்.

இன்பவாழ்வு நீடிக்க முடியாமல் பெருந்தேவியை மூச்சுப்பை நோய் வாட்டத் தொடங்கியது. வேளிர்குடியில் நல்ல மருத்துவர்களுக்குப் பஞ்சமேயில்லை. திறன் படைத்த மருத்துவ சிகாமணிகள் எல்லாம் பார்த்தும் பலன்

ஏற்படவில்லை. எலும்புந் தோலுமாக ஆகிவிட்டாள் அரசி. நாழிகை தவறினாலும் தவறும், அரசிக்கு மருந்து அளிப்பது தவறுவதில்லை. இந்த நிலையில் அரசன் என்றால் ஒரு அரசி இருக்கவேண்டும் என்ற முறைமையை மட்டும் பெயரளவில் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறாள் பெருந்தேவி.

நாட்டுக்குக் கேடு வந்து காட்டுக்கு வந்த பிறகு அரசியின் நோய் அதிகப்படுவதற்குக் கேட்கவா வேண்டும்? தன் கணவனின் நிலையை நினைத்து அழுது அழுது அரசியின் முகமெல்லாம் வீங்கிக் கிடந்தது. அந்த வீங்கிய முகம் எதுவும் இப்போது இருங்கோவேளின் மனத்திரையில் நிழலாட்டம் போடவில்லை. அழகு தேங்கிய முத்துநகையின் வதனம் மட்டுமே அவன் உள்ளத்தில் பெரும் போராட்டத்தை மூட்டிவிட்டுக் கொண்டிருந்தது.

அழகையெல்லாம் ஒருசேர எடுத்துச் செய்த தங்கச்சிலை போன்றாள் தனித்து ஏன் உலவ வேண்டும்? ஆபத்து எதுவும் ஏற்படாமல் இருப்பதற்குத்தான் அந்த ஆண் உடையா? அல்லது அவள் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளவா? அவள் பேச மறுப்பது ஏன்? பேசினால் பெண் குரல் தெரிந்துவிடும் என்றுதானே! அவள் குளித்த காட்சியைக் கண்டிராவிட்டால் நாம் கூட ஏமாந்துதான் போயிருக்க வேண்டும்.

—இப்படியெல்லாம் கேள்விகளும் பதில்களும் எழுதப்பட்டு உடனுக்குடனே அழிக்கப்பட்டு அவள் உருவம் மட்டும் அழியாத சித்திரமாகப் பதிந்து விட்டதை அவன் உணர்ந்தான்.

அவன் பார்க்கும் பச்சிலைகளின் பசுமை நிறத்தின் மீதெல்லாம் அவள் பளிங்கு முகத்தையே கண்டான். அவள் கழுத்தைத் திருகுவது போல் அந்தப் பச்சிலையை எப்படிப் பறிப்பது என்று தயங்கி நின்றான். பெரிய மரமொன்றில் ஒரு நீல நிறப் பசலைக்கொடி படர்ந்து கிடந்தது. அந்தக் கொடியை அவள் குளிக்கும்போது கண்ட அந்த இடை நெளிவோடு ஒப்பிட்டுப்பார்த்து கொடி தோற்றுவிட்டதாக வலிய வந்து தீர்ப்புக் கூறினான்; வழக்கு நடக்காமலே! செவ்விள நீர் தாங்கி நிற்கும் இளந்தென்னைகளைக் கண்டான். ஏனோ அவனையறியாமல் பெருமூச்சு எழுந்தது. கண்களை மூடிக்கொண்டு நின்றான்.

ஏனெனில் திடீரெனக் கண்ணைத் திறந்து நாடிவந்த பச்சிலையைப் பறித்துவிடலாம் என்றதந்திரம்—இல்லாவிட்டால் பச்சிலைச் செடிகள் அவளாகவே மாறிவிடுகின்றனவாம்! கண்ணை மூடினால் இன்னும் மோசம்! குளக்கரை எதிரே வந்து நின்று அவன் உயிரை மெல்ல மெல்லக் கொல்ல முனைந்தது.

"இருங்கோவேள்! உனக்கு இரும்பு நெஞ்சன் என்று பெயர். நீயா இப்படி மனந்தளருகிறாய்? மயக்கமுறாதே!" என ஒரு முறை உரக்கச் சொல்லிக் கொண்டு வெகு வேகமாக நடந்தான்.

எதிரே பச்சிலைச் செடி! திடீரென்று பாய்ந்து அந்தச் செடியைப் பிடுங்கினான். அந்தச் செடியோடு ஒரு பாம்பும் சுற்றிக் கொண்டிருந்தது. அதை அவன் கவனிக்கவில்லை. அவள் நினைவு அவனை எதையும் கவனிக்க விடவில்லை. பாவம்; பாம்பு கிடந்து தவித்தது அவன் கையில் தலையைக் கொடுத்துவிட்டு!

மாமாவென்று மண்டபத்திற்கு வந்தான், மண்டபம் காலியாக இருந்தது.

அவள் இல்லை! அவள் அப்போதே போய்விட்டாள்!

பச்சிலைச் செடியைக் கீழே போட்டான், பாம்பு விடுபட்டுத் தப்பித்தோம் பிழைத்தோம் என்றுஓடி மண்டபத்துக்குள்ளே ஒரு பொந்தில் புகுந்து கொண்டது. அவளைக் காணாத திகைப்பில் பாம்பு கையில் இருந்து கீழே விழுந்ததையும் ஓடியதையும் ஒளிந்ததையும் அவன் கவனிக்கவே இல்லை.

மண்டபத்தைச் சுற்றிச் சுற்றி அலைந்தான். குளக்கரையில் போய் நின்றான். அவள் குளித்த இடத்தில் போய் சிறிது நேரம் உட்கார்ந்தான். தண்ணீரைக் கையில் அள்ளி முகத்தில் ஊற்றிக் கொண்டான். பிறகு எழுந்து நடந்தான்.

வெகுதூரம் நடந்து காட்டுக்குள்ளே சென்று மறைந்த இருங்கோவேள் ஒரு உயர்ந்த குதிரையில் ஏறிக்கொண்டு தன் மரமாளிகை நோக்கி விரைந்தான். மரமாளிகையின் வாயிலிலே நின்ற வீரர்கள் குதிரையைப் பிடித்துக்கட்டி அதற்கான உபசரணைகளைச் செய்தார்கள்.

இருங்கோவேள் மாளிகைக்குள்ளே சென்று ஆடை மாற்றிக் கொண்டு மரமாளிகையின் முகப்புக்கு வந்தான். அவன் வருகையை அறிவிக்கக் கொம்பு வாத்தியம் முழங்கிற்று. எல்லா வீரர்களும் ஓடிவந்து அணிவகுத்து நின்றார்கள். அவர்களைக் கம்பீரமாகப் பார்த்து அவர்கள் அளித்த மரியாதை வணக்கத்திற்குப் பதில் தெரிவிக்கும் வகையில் தலையை அசைத்தான் வேளிர் குடி வேந்தன்.

"ம்! அழைத்து வாருங்கள் சிறைப்பட்டவர்களை!" என்று உத்திர விட்டான் ஒரு சேனாதிபதி.

நாலைந்து வீரர்கள் ஓடினார்கள்!

ஒரு மணி பயங்கரமாக ஒலித்தது.

நூறு வீரர்கள் கொழுந்துவிட்டெரியும் தீவட்டிகளைக் கையிலேந்தி வந்தார்கள். அந்தத் தீவட்டிகள் அங்கே—பூமியில் சொருகப்பட்டன. தூரத்திலே கூட நிற்கமுடியாத அளவுக்கு தீவட்டிகளின் ஜுவாலை வீசிக் கொண்டிருந்தது. சிறைப்பட்டவர்கள் பலர் கையில் விலங்கு மாட்டப்பட்டு இழுத்து வரப்பட்டார்கள்.

அவர்களில் செழியனும் ஒருவன். சோர்ந்து போய் நடக்க முடியாமல் நடந்து வந்தான். ஆனால் அந்த நடையிலும் வீரம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது.

பூமியில் சொருகப்பட்டிருந்த தீவட்டிகளுக்கு நடு நடுவே சிறைப்பட்டவர்கள் நிறுத்தப்பட்டார்கள். தீ நாக்குகளைப் பல முனைகளிலும் சுழற்றிச்சுழற்றி எரிகின்ற அந்தப் பந்தங்கள் உமிழும் அனலை எப்படித்தான் அவ்வளவு அருகாமையில் இருந்து தாங்கிக் கொள்ள முடியும்?

சிறைப்பட்டவர்கள் அனைவருமே சோழநாட்டுக்காரர்கள் என்பதை செழியன் புரிந்து கொண்டான். இத்தனை பேர் சோழமண்டலத்திலேயிருந்து தூக்கி வரப்பட்டும் தன்னுடைய நாட்டுக்கு வர இருக்கும் ஆபத்தை உணராமல் இருக்கிறானே சோழன்; என்று கோபங் கூட வந்தது செழியனுக்கு.

இவர்கள் எல்லாம் ஏன் சிறைப்பட்டார்கள்?

இவர்களுக்கு சோழநாட்டு அரண்மனையில் என்ன பதவி? வீரர்களா? பிரதானியரா? அல்லது நாட்டுப் பெருமக்களா?

செழியனின் கேள்விகட்குப் பதில் கூற அங்கே யார் இருக்கிறார்கள்? அவர்களும் செழியனை ஆவலோடு பார்த்தார்கள்.

"யார் புது ஆள்?" என்ற வினாக்குறியை அத்தனை பேர் விழிகளும் எழுப்பிக்காட்டின.

இருங்கோவேள் பேச ஆரம்பித்தான். தவறு! தவறு! கர்ச்சிக்க ஆரம்பித்தான்.

"அடிமைகளே! எத்தனை நாளைக்கு இப்படி தொல்லை அனுபவிக்கப் போகிறீர்கள்? நீங்கள் எப்படியும் விடுதலையாகப் போவதில்லை. சிறைப்பட்டிருக்கும் போதாவது கஷ்டமில்லாமல் வேதனைப்படாமல் இருக்க வேண்டுமானால் ஒழுங்காக உண்மையைச் சொல்லி விடுங்கள். ஏய் செழியா! முட்டாள் வாலிபனே! பாண்டிய நாட்டு வீரனே! நீயும் உனக்குத் தெரிந்த உண்மைகளைச் சொல்லலாம். கரிகால் சோழன் தன்னந்தனியாக சிந்திப்பதற்கென்று ஒரு ரகசிய இடத்திற்குப் போகிறானே அந்த இடம் எது? இதோ இந்த முட்டாள்கள் அந்த உண்மையைச் சொல்லாமல் உயிர்வேதனை அடைகிறார்கள். செழியா! உனக்குத் தெரிந்தால் நீ சொல்லித் தப்பித்துக்கொள்!"

செழியன், இருங்கோவேளுக்குப் பதில் கூறினான்:

"சோழர் சிந்திக்கும் இடம் ரகசியமான இடம் என்று நீரே சொல்லுகிறீர். அந்த ரகசியமான இடம் எனக்கும் இவர்களுக்கும் எப்படித் தெரியும்?"

"என்ன ஆணவம்! அடே இங்கு சட்டம் என்ன தெரியுமா? சோழ நாட்டுக் கைதிகள் யாராவது வாய்திறந்தால் அவர்கள் கரிகாலனைப் பற்றிய உண்மைகளைச் சொல்வதற்கு மட்டுமே வாய்திறக்க அனுமதிக்கப்படுவார்கள். அல்லாமல், "அய்யோ அப்பா!" என்று கத்துவதற்குக் கூட இங்கு வாய் திறக்கக்கூடாது! தெரிந்துகொள்!"

—இப்படி ஆத்திரத்தோடு முழங்கிவிட்டு இருங்கோவேள் அதைவிட்டு அகன்றான். தீப்பந்தங்களின் கொடிய அனலுக்கு நடுவே சோழ நாட்டுக் கைதிகளும் செழியனும் துடித்தவாறு நின்றார்கள்.

இருங்கோவேள் சென்று சிறிது நேரத்திற்கெல்லாம் அனலில் மயக்கமுற்று சில கைதிகள் 'தடால் தடால்' எனத்தரையில் விழுந்தனர்.

அந்தக் கோரக் காட்சியைப் பார்த்தவாறு செழியன் எரிமலை போல் குமுறிக்கொண்டு நின்றான். ஆடவில்லை, அசையவில்லை அவன். அக்கினி அவனுடலைத் தீய்த்தபோதிலும் வீரத் திருநோக்குடன் அவன் நின்று கொண்டிருந்தான். மரமாளிகைக்குள்ளேயிருந்து அரசி பெருந்தேவியும், தாமரையும் மற்றவர்களும் அந்தக் கொடுமையான தண்டனைக் காட்சியை பலகணிகளின் வழியே பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது உள்ளே மன்னன் இருங்கோவேள் நுழைந்தான். அரசி, படுக்கையிலிருந்தவாறு கை நீட்டி மன்னனை அருகழைத்து மரியாதை செய்வித்தாள்.

"என்னம்மா தாமரை! என்ன மிகுந்த சோகத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என வினவினான் தங்கையைப் பார்த்து இருங்கோவேள்.

"எல்லாம் சரிதான் அண்ணா! ஆனாலும் சோழ நாட்டுக் கைதிகளை இவ்வளவு கொடுமையாகத் தண்டிப்பது மனிதாபிமானத்தை மீறிய செயலாக எனக்குத் தோன்றுகிறது!" — என்றாள் கொஞ்சம் துணிவை வரவழைத்துக்கொண்டு, தாமரை!

"பைத்தியக்காரப் பெண்ணே! அந்தப் பாவிகளிடம் இரக்கம் வேறா உனக்கு? நாடிழந்தோம். நலமிழந்தோம். நாடோடிகளைப் போல நடுக்காட்டில் மிருக வாழ்க்கை நடத்துகிறோம். இந்த நிலைக்கு நம்மை ஆளாக்கிவிட்டவர்களை என்ன பாடுபடுத்தினாலும் தகும்!" என வெறிகொண்டவனைப்போல கத்தினான் இருங்கோவேள்.

தாமரை, அதற்குமேல் எதிர்த்துப் பேச விரும்பவில்லை. பலகணி பக்கம் போய்விட்டாள். அதன் வழியாக அந்தக் கைதிகளைப் பார்த்திடத் தொடங்கினாள். ஒவ்வொருவராகக் கீழே விழுந்துகொண்டிருந்தனர். அவளுக்குக் கண் கலங்கியது. அந்தக் காட்சியில் அப்படியே மெய் மறந்து நின்றுகொண்டிருந்தாள்.

[தொடர்ச்சி பக்கம்—12]

விற்பனையாகிறது !

இதழ்—28

★

துள்ளிவரும் தமிழ் நடையழகை
அள்ளிவரும் புதிய அமைப்பு!

முத்தாரம்

கலையழகுடன் நாட்டின் நிலைவிளக்கும்
கட்டுரைகள் கதைகள் கவிதைகள்
நிரம்பிய

இலக்கிய ஏடு

திமிர் பிடித்த எலிகளே! தீயிட்டுவிட்டேன் வீட்டுக்கு!

★

"அக்ரமத்திலும் அக்ரமம்!"

"எதைச் சொல்கிறாய்?"

"நம் வீட்டில் நடப்பதைத்தான் சொல்கிறேனய்யா! திடீரென உணவுப் பொருட்கள் காணப்படுவதில்லை; இராத்திரி பூராவும் ஒரே சத்தம்; சுவர்கள் பூராவும் பெரிய பெரிய துளைகள்!"

"யாரடா அது, இந்த அக்ரமங்களைப் புரிவது? பெயரைச் சொல்! கூண்டோடு தீ வைத்துப் பூண்டோடு அழித்து விடுகிறேன்; என்னைப்பற்றிச் சரிவரத் தெரியாத அந்தப் பொடிப் பயல் யார்?"

"எலிகள், ஐயா!"

"எலிகளா; அவைகள் எங்கிருக்கின்றன?"

"நம் வீட்டுச் சுவர்களிலும், கூரையிலும்!"

"அப்படியா? வை; நம் வீட்டுக்குத் தீ!"

"நம் வீட்டுக்கா தீ வைப்பது?"

"ஆமாண்டா, முட்டாள்!"

★ ★ ★

எலிகளை அழிக்கத் தன் வீட்டுக்கே தீ வைத்த இப்படிப்பட்ட விநோத மனிதர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள்?

வெண் சாம்பல் பூசிக்கொண்டு, ஊமத்தம் பூவைக் காதில் செருகிக் கொண்டு தெருவோரத்துச் சாக்கடைகளில் புரளுகிறார்களா?

விலங்கு மாட்டியும் வாய் ஓயாது பேசியவண்ணம் பைத்தியக்காரர்களின் மருத்துவ மனையில் இருக்கிறார்களா?

அங்கெல்லாம் அவர்கள் இல்லை! இந்த நாட்டு அரியணையிலே அமர்ந்திருக்கிறார்கள்; ஆம்; நம்மை ஆளும் பொறுப்பேற்றிருக்கிறார்கள்!

மேற்கண்ட கடுமொழிகள் தவறல்ல என்பதைக் கீழ்க்காணும் நிகழ்ச்சி சித்தரிக்கிறது:

"அக்ரமத்திலும் அக்ரமம்!"

"எதைச் சொல்கிறாய்?"

"நம் நாட்டில் நடப்பதைத்தான் சொல்கிறேன்; ரயில்களில் அபாயத்தை அறிவிக்கப் பயன்படும் சங்கிலிகளை அக்ரமமாக — அநியாயமாக இழுத்துத் தொலைக்கிறார்கள் என்பதற்காக அபராதத்தை 50 ரூபாயிலிருந்து 150 ரூபாய் என்று உயர்த்தினோம்!"

"ஆமாம், அதற்கென்ன?"

"உயர்த்தி என்ன பயன்? எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லையே?"

"ஏன்...சங்கிலிகளை இழுப்போர் அதிகமாகி விட்டனரா? சட்டத்தை மீறுவோர் அதிகமாகி விட்டனரா?"

"ஆமாம்; அபாய அறிவிப்புச் சங்கிலிகள் இழுக்கப்படுகின்றன; நடுவழியில் ரயில்கள் அடிக்கடி நிறுத்தப்படுகின்றன."

"ஆ......இந்த அக்ரமங்கள் நடப்பது எந்த மாநிலத்தில்?"

"உத்திரப் பிரதேசத்தில் நடைபெறுகின்றது; 13 ரயில் வண்டிகளில் மாத்திரம் சிலர் அடிக்கடி அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுக்கிறார்களாம்!"

"இத்தனை திமிர் பிடித்த குறும்புக்காரர்களை ஒடுக்க வேண்டும்; அடக்க வேண்டும்!"

"ஆமாம் அப்படி அடக்கினால்தான் அல்லற்படும் மக்கள்......"

"அடசட்...மக்கள் கிடக்கிறார்கள்! சட்டத்தை மீறுகிறவர்களின் அக்ரமத்தை ஒடுக்குகிறேன் பார்! அத்துடுக்குக்காரர்களை அடக்குகிறேன் பார்!"

"அது எப்படி?"

"அந்த அபாய அறிவிப்பு சங்கிலிகளையே 13 ரயில் வண்டிகளிலிருந்தும் எடுத்துவிடு!"

"இழுப்பவர்களைத் தண்டிக்காது, சங்கிலிகளையே அகற்றிவிடுவதா?"

"ஆமாண்டா, முட்டாள்!"

திருவாரூர் நகரில் தேமதுரத் தமிழோசை!

இசைமுரசு முழங்கிய திருவாரூரில் இம்மாதம் முதல் வாரத்தில் முத்தமிழ் முழங்கியது. ஆம்; தேமதுரத் தமிழோசை திருவாரூரின் தெருக்களிலெல்லாம் ஒலித்தது. திருவாரூர் இளைஞர் கழகம், "இரண்டாவது முத்தமிழ் விழா"வை ஏற்பாடு செய்து, தமிழன்னையின் சிறப்பைப் புகழ்வதோடு நின்றுவிடாது, தமிழை வளர்க்கவும், தமிழிலே நல்ல இலக்கியங்கள் மலர்வதற்கு, நாம் என்னென்ன தொண்டுகள் செய்ய வேண்டுமென்பதையும் விவாதித்து, நல்ல முடிவுகளைக் கண்டு தமிழகத்திற்குத் தந்துள்ளது.

"எட்டு திக்குகளுக்குஞ் சென்று கலைச் செல்வங்கள் யாவையுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" —என்ற சிறந்த வேண்டுகோளை தமிழகத்துக்கு விடுத்துள்ளது.

ஒருவிழா நடத்துவதெனில் அது மிக எளிதான செயலல்ல; பெரிய பெரிய கழகங்கள், ஆளுங் கட்சியினரைச் சேர்ந்த அரசியல்வாதிகள் கூடச் சிறப்பாக ஒரு கூட்டத்தை நடத்தி முடிக்க முடியாது திணறிப் பெருமூச்சு விடுகின்றனர். ஆனால் திருவாரூர் நகரத்தின் இளைஞர்களோ, ஆயிரக் கணக்கான ரூபாய்களைத் திரட்டி, அழகான முறையில் பந்தலமைத்து, நாடக மேடையமைத்து, மூன்று நாட்கள் சிறப்பான முறையில் முத்தமிழ் விழாவைக் கொண்டாடினார்களெனில் அதை நம்மால் பாராட்டாமலிருக்க முடியாது!

இவ்விழாவை வெற்றிகரமாக நடத்தியதுமூலம், "தமிழனின் தமிழ் உணர்ச்சி இன்னும் செத்தொழிந்து விடவில்லை! தமிழனின் உடலிலே இன்றைக்கும் தமிழ் இரத்தம் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது!" என்பதை நிரூபித்து விட்டார்கள்.

ஏராளமான பொருட் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டிற்கு, நுழைவுக் கட்டணம் வைத்திருந்தும், ஆர்வமுடன் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கூடினர்.

முதல்நாள் இயல் விழாவிலே, திராவிட மொழி நூலாசிரியரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் திராவிட மொழிகள் ஆராய்ச்சிக் குழுவின் உறுப்பினருமான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் தலைமை வகித்து "தமிழின் பதினாறு தன்மைகளை" விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினார். தமிழின் சிறப்புகளையெல்லாவற்றையும் எடுத்துரைத்து, அது உலக மொழிகளிலேயே சிறந்த மொழியென்று அவர் விளக்கினார்.

அடுத்து மாநாட்டைத் துவக்கி வைத்து திரு. கி மனோகரன் எம். ஏ. அவர்கள் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் தம்முடைய பேச்சில், "நல்ல இலக்கியமென்றால் எப்படி இருக்க வேண்டும்? நல்ல இலக்கியங்கள் தோன்ற நாமெல்லாம் என்ன செய்ய வேண்டும்? தமிழுக்கு நேர்ந்துள்ள இன்றைய நிலையைப் போக்க இளைஞர்கள் கடமையென்ன?" என்பதையெல்லாம் விளக்கிப் பேசினார். அண்ணாவின் மறுமலர்ச்சி இலக்கியங்களைக் குறித்து அவர் பேசியபோது கூட்டத்திலே கையொலியும், ஆரவாரமும் தோன்றின!

அடுத்து சிறப்புரை வழங்கிய பேராசிரியர் அன்பழகனார் தமிழ் அறமாகிய திருக்குறளறத்தின் மாண்பு குறித்தும், குறள் காட்டும் வழி, கண்ணன் காட்டும் வழியை விட எங்ஙனம் சிறந்ததென்பதையும் விளக்கினார். திருக்குறள் அறம் உலகிலேயே சிறந்த அறமென்பதையும், குறளே உலகத்தின் பெரியதொரு அறிவு ஒளியென்பதையும் அவர், ஆராய்ச்சித் தெளிவுடன் எடுத்துரைத்தார்.

முடிவில், "பாவாணர் போன்றவர்களையும், திரு. அப்பாதுரையார் போன்றவர்களையும் மேனாட்டிற்கு அனுப்பி வைத்து தேமதுரத் தமிழோசையை உலகெங்கும் பரப்ப வேண்டும்! இன்றைய ஆட்சியினர் அவர்களை அனுப்பாவிட்டால், அவர்களை நீக்கிவிட்டு, வேறு ஆட்சியினரை அமர்த்தியாவது அனுப்பித் தமிழோசையை உலகெங்கும் ஒலிக்கச் செய்வோம்!" என்று கையொலிக்கிடையே கூறினார்.

இரண்டாம் நாள் இசைவிழா.

திரு. ப. சுந்தரேசன் அவர்களின் இன்னிசையில், குழலிசையும், யாழிசையையும், கேட்டு மகிழ்ந்தோம். திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் "தமிழிசையின் சிறப்பு" குறித்து நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மூன்றும் நாள், திரு. டி. கே. சீனிவாசன் அவர்கள் தலைமையில், திரு. பி. சி. கணேசன் அவர்கள் எழுதிய 'திருவாளர் பிரபலம்" என்ற நாடக அரங்கேற்றம் நடைபெற்றது.

கடைசியில், இளைஞர் கழகத்தின் முன்னேற்றத்தில நாட்டம் கொண்ட ஆரூர் இளைஞன் என்ற முறையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பேராசிரியரையும், பாவாணரையும், அடிகளாரையும் அழைத்து வந்து விழா நடத்துகிற நேரத்திலே, ஆரூரின் இளைஞர்களையும் பேசச் செய்து, அவர்களின் பேச்சுத் திறனையும் வெளிப்படுத்தியிருக்கலாம்!

எது எப்படியாயினும், திருவாரூர் இளைஞர்களின் முத்தமிழ் விழா, தமிழன்னையின் மாசு துடைக்க, இந்தியை விரட்டி அடிக்கக்கூடிய வீர விழாவாக இருந்தது. தமிழுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அஞ்சா நெஞ்சத்துடன் முரசொலித்து ஆட்சியினருக்கு அறிவிக்கும், இது போன்ற விழாக்களை நாடெங்குமுள்ள இளைஞர்கள் நடத்தினால்தான் தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் முழங்க முடியும்! தெருவிலே முழங்கிய அத்தமிழோசை நாட்டிலே முழங்கும்! நாட்டின் ஆட்சி பீடத்திலே முழங்கும்! தமிழன் போகும் உலகத்து நாடுகளிலெல்லாம் தமிழோசை முழங்கும்! தமிழோசை கேட்ட பிற நாட்டாரும் "இனிமைத் தமிழ்மொழி வாழ்க!" வாழ்த்தொலி வழங்குவர்.

அதிகம் வளர்த்துவானேன்?... இரண்டாம் முத்தமிழ் விழாவின் மூலம், திருவாரூர் இளைஞர்கள், அவர்களுக்கு முத்தமிழில் உள்ள ஆர்வத்தையும், பற்றையும் நன்கு வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

—ஆரூர் ஆனந்தன்



மனிதனின் கதை

பி.சி. கணேசன்

அன்புள்ள மாதவி,

கலையிலும், இசையிலும், சிற்பத்திலும், சித்திரத்திலும், சிற்றின்பத்திலும் மொகலாய மன்னர்களின் கவனம் அதிகரிக்கவே கஜானா காலியாயிற்று; நாட்டு நிர்வாகத்தில் நாட்டம் குன்றவே வறுமையும், பிணியும் மக்களை வாட்டத்தொடங்கின. பொருளாதார வளம் ஒரு நாட்டில் சீரழிந்தால், மக்களிடையே கட்டுப்பாட்டுணர்ச்சி சிதையும். சட்டம் பலஹீனமடையும்; விளைவு? ஒன்று புரட்சி, அல்லது நாடு சிதைந்து குழப்பம் மேலிடும்.

அக்பர் அமைத்த சாம்ராஜ்யத்தை அவருடைய சந்ததியினர் நிலைகுலையச் செய்தனர். அக்பர் விதைத்தார்; இதர மொகலாய மன்னர்கள் ஆறுவடையின் பலனை அனுபவித்தார்களே தவிர, விதையை சேமிக்க வேண்டும்; நிலத்தை உழுது, பண்படுத்தி, நீர்பாய்ச்சி, விதை விதைத்துக் கருத்தோடு கவனித்து வந்தால் மட்டுமே வருங்கால சந்ததி வாழ முடியும் என்பதையெல்லாம் அறவே மறந்தனர். இறந்தகாலத்தை எண்ணிப் பார்க்காமல், நிகழ்காலத்தை நிம்மதியாகக் கழித்து வருங்காலத்தைக் கோட்டை விட்டனர். அக்பருக்குப் பிறகு நாட்டு நிர்வாகத்தில் அக்கறை காட்டியவர் ஔரங்கசீப்தான்! ஆனால் பாவம், ஔரங்கசீப்பின் அரசியல் நோக்கு பரந்ததாக-பண்புள்ளதாக இருக்கவில்லை. மதப்பற்று வெறியாகி அவர் கண்களை மறைத்தது. மத ரீதியில் அரசியலை நடத்த முயன்று மகத்தான தோல்வி கண்டவர் அவர்! நிர்வாகத்திறமையும், படைபலமும், இதர அவரது ஆற்றல்களும் மொகலாய சாம்ராஜ்யத்தின் சரிவைத் தடுக்க முடியவில்லை; மாறாக அழிவைத் துரிதப்படுத்தியது!

தந்தையைச் சிறையிலடைத்தும் சகோதரர்களைக் கொன்றும் அரியணையைக் கைப்பற்றியவர் ஔரங்கசீப்! இரத்தக் கறை படிந்த கரங்களோடுதான் அவர் செங்கோலைப் பிடித்தார். அவர் ஆட்சிக்காலம் முழுவதையும் இரத்தவாடையிலேயே கழித்தார். மொகலாய சாம்ராஜ்யத்தின் எல்லை ஔரங்கசீப்பின் காலத்தில் விரிந்தது; ஆனால் பலமோ படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தது. ஔரங்கசீப் இறந்து அரை நூற்றாண்டுகளுக்குள்ளாகவே மொகலாய சாம்ராஜ்யம் இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோயிற்று.

ஔரங்கசீப்பின் ஆட்சிக்காலம் முழுவதும் சீக்கியர்களும் மகாராஷ்டிரர்களும் தொல்லை கொடுத்துக்கொண்டேயிருந்தனர். ஔரங்கசீப்பின் மதவெறி இந்துக்களின் மதவுணர்ச்சியைத் தூண்டியது. இந்து சனாதனிகள் தங்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும், ஔரங்கசீப்பின் எதேச்சதிகாரத்தை முறியடிக்கவும் நல்ல தலைவன் ஒருவனைக் கண்டுபிடித்தனர். அவன்தான் 'மலைஎலி' என்று வரலாற்றில் குறிப்பிடப்படும் சத்ரபதி சிவாஜி. தந்திர குணமும், வீர உணர்ச்சியும், லட்சிய வெறியும் கொண்ட சிவாஜி சிறந்த தளகர்த்தனாக இருந்து இந்துக்களை வழிநடத்தினான். ஔரங்கசீப்பின் பலஹீனங்களைத் திறம்படப் பயன்படுத்திக்கொண்டு, தன்னைப் பலப்படுத்தி ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவிய ராஜதந்திரி சிவாஜி!

பீஜப்பூர் சுல்தானிடம் வேலை பார்த்துவந்த ஷாஜிபான்ஸ்லேயின் மகனாக 1627-ம் ஆண்டு சிவாஜி பிறந்தான். இருபத்தி ஐந்து வயது நிரம்புமுன்பே, சிவாஜி தன்னைச் சுற்றி இளைஞர் படையொன்றைத் திரட்டிக் கொண்டு, அரசியல் சக்தியாக உருவெடுத்தான். மேற்குக் கணவாயிலிருந்த கோட்டைகள் சிவாஜியின் கைவசம் வந்தன.

44. மொகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி

இதுகண்ட பீஜப்பூர் சுல்தான் கோபமடைந்தான். சிவாஜியை அடக்கப் படையொன்றை அனுப்பிவைத்தான். சுல்தானின் படையை சிவாஜி 1655-ல் தோற்கடித்தான். பூனாவைச் சுற்றியுள்ள பிரதேசத்தின் முடிசூடா மன்னனாக சிவாஜி திகழ்ந்தான். வளர்ந்து வரும் சிவாஜியின் பலம் கண்டு ஔரங்கசீப் பயந்தார். சிவாஜியை நசுக்கப் பலம் பொருந்திய பல தளபதிகளைப் படையுடன் அனுப்பி வைத்தார். 1665-லிருந்து சிவாஜியின் கோட்டைகள் பல ஔரங்கசீப் வசமாயின. தந்திரசாலியான சிவாஜி, ஔரங்கசீப்பின் ஆணைக்குப் பணிபவன்போல் பாசாங்கு செய்தான். ஆக்ரா நகருக்கு வந்து தன்னை சந்திக்கும்படி சிவாஜிக்கு ஔரங்கசீப் அழைப்பு விடுத்தார். விருந்தினனாக வந்த சிவாஜியை சிறைப்படுத்தினார் ஔரங்கசீப். சாகசக்காரனான சிவாஜி, சிறையிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பி, சாதுபோல் வேடமணிந்து தாயகம் திரும்பினான். சிவாஜியின் பலம் இரட்டிப்பாக வளர்ந்தது. 1674-ல் ரெய்கார் நகரில் சிவாஜி மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். அதற்கு அவன் பட்ட கஷ்டங்களை அண்ணாவின் பேனா அழகுறச் சித்தரித்திருப்பதைத்தான் நீ ரசித்து மகிழ்ந்திருக்கிறாயே!

அக்பரின் மதக் கொள்கையை ஔரங்கசீப்பும் கடைப்பிடித்திருந்தால், மொகலாய சாம்ராஜ்யம் வலுப்பெற்று இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறே ஒரு புதுத் திருப்பம் பெற்றிருக்கும். சிவாஜியின் கனவு நனவாகியிருக்காது. ஔரங்கசீப்பிடம் நல்ல பல பண்புகள் இருந்தன. ஆடம்பரத்தால் ஏற்படும் அழிவை எண்ணிப் பயந்த ஔரங்கசீப் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். சொந்த வாழ்க்கைச் செலவுகளுக்காக அவர் அரசாங்க கஜானாவில் கை வைத்ததே இல்லை. குரானில் சொல்லப்பட்ட எளிய வாழ்க்கையையே கைக்கொண்டு வாழ்ந்தார். குரான் கைப்பிரதிகள் எழுதி விற்றும், குல்லாய் தைத்து விற்றும் கிடைத்த வருமானத்தால் தனது சொந்த வாழ்க்கையை நடத்திக் கொண்டார். இசையை ஆடம்பரத்தின் ஒரு பகுதியாக எண்ணி வெறுத்து ஒதுக்கினார். இந்து மதத்தை அழிப்பதைப் புனிதமான கடமைகளில் ஒன்றாகக் கருதினார். அக்பர் காலத்தில் நீக்கப்பட்ட 'ஜிசியா' வரியை மீண்டும் விதித்தார். இது இந்துக்களின் மீதுமட்டும் விதிக்கப்பட்ட வரியாகும். அக்பர் காலத்தில் செய்யப்பட்டதற்கு மாறாக இந்துக்கள் பெரும் பதவிகளுக்கு அமர்த்தப்படுவதைத் தடை செய்தார். அக்பரின் ஆட்சி நிலைபெற ராஜபுத்திரர்கள் பெருந்துணையாக இருந்தனர். ஆனால் ஔரங்கசீப்பின் தவறான கொள்கை ராஜபுத்திரர்களைப் பகைவர்களாக்கி, அவர்களோடு போர் புரியும் நிலையை ஏற்படுத்தியது. சிவாஜியின் மரணத்துக்குப் பிறகு ஔரங்கசீப் மகாராஷ்டிர ராஜ்யத்தை வென்று, சிவாஜியின் மைந்தனையும் கொன்று வஞ்சம் தீர்த்துக் கொண்டார். சுதந்தா முஸ்லிம் நாடுகளான பீஜப்பூர், ஆமத்நகர், கோல்கொண்டா (இப்பொழுதுள்ள ஹைதராபாத்) ஆகியவைகள் ஔரங்கசீப்பின் ஆட்சிக்கு உட்பட்டன. 1707-ல் ஔரங்கசீப் இறந்தபொழுது வட இந்தியா, தட்சிணப்பீடபூமி, சென்னை மாநிலத்தின் ஒரு பகுதி மொகலாய சாம்ராஜ்யத்தில் இருந்தன. ஆனால் சென்னை மாநிலத்தின் பெரும் பகுதி ஔரங்கசீப்புக்கு அடிபணியவில்லை.

மொகலாய மன்னர்களில் ஆடம்பரமின்றி வாழ்ந்து முழுக் கவனத்தையும் அரசியலில் செலுத்தியவர் ஔரங்கசீப். பாட்டன் ஜஹாங்கீரைப் போல் இலக்கியத்திலோ, தந்தை ஷாஜஹானைப் போல் சிற்பக் கலையிலோ ஔரங்கசீப் பற்றுக் கொண்டிருக்கவில்லை. ஔரங்கசீப் சிறந்த தளபதியாக விளங்கினார். ஆனால் அவநம்பிக்கை கொண்ட அவர் எந்த அரசியல் அதிகாரியையும் நம்பி முழுப் பொறுப்பையும் ஒப்படைத்ததில்லை. தனி வாழ்க்கையில் அவர் கொண்டிருந்த விசித்திரக் கருத்துக்களும், பொது வாழ்க்கையில் அவர் கொண்டிருந்த குறுகிய நோக்கமும் மொகலாய சாம்ராஜ்யத்தை அழிவுப் பாதையில் வேகமாக இழுத்துச் சென்றன. ஔரங்கசீப் இறந்து ஐந்து ஆண்டுகளிலேயே மொகலாய சாம்ராஜ்யத்தில் பெரும் கலகங்கள் தோன்றின. மொகலாய ராஜ்யத்தின் பலம் பொருந்திய

[தொடர்ச்சி பக்கம்—12]

'அகிம்சை' வாழ்க!

சென்னையில் ஓரிரண்டு பஸ்களைத் தீ தின்றது, நேரு பிரான் வந்தபோது!

காங்கிரசைத் துதி பாடும் பத்திரிகைகள் அலறின! 'காலித்தனம்' 'குண்டர்களின் வெறியாட்டம்' 'பொதுச்சொத்து சேதமா?' 'சூறையாடும் அரக்கர்கள்' 'பயங்கரவாதிகளின் வெறிச்செயல்'—என்று அகராதியிலிருந்தும், அனுபவத்திலிருந்தும் வசைச் சொற்களை எடுத்தாண்டன; வசை பாடின. ஆனால், அதே பத்திரிகைக்காரர்களால் ஆதரிக்கப்படும் காங்கிரஸ் கட்சியின்—அஹிம்சா வாதிகளின் நிஷ்களங்கமற்ற சத்தியாக்கிரகப் போர்கள் கேரளத்தில் நடைபெறுகின்றனவாம்! அவற்றின் பட்டியல் பின் வருமாறு:

* 150 இடங்களில் சர்க்கார் பஸ்கள் தடுத்து நிறுத்தப் பட்டன!

* 20 டிரான்ஸ்போர்ட் படகுகள் நாசப்படுத்தப் பட்டன!

* 10 டிரான்ஸ்போர்ட் படகுகளின் மீது சரமாரியாகக் கற்கள் வீசப்பட்டன!

*13 பஸ்களின் டயர்களில் காற்றுப் பிடுங்கப்பட்டு தீ வைக்கப்பட்டது!

* 5 பள்ளிக்கூடங்களில் தீ வைக்கப்பட்டது!

* 14 பள்ளிக்கூடங்களின் பொருட்கள் நாசமாக்கப்பட்டன!

இத்தனை காலிச் செயல்கள் செய்யப்பட்டும் கூட காங்கிரஸ் தலைவர்கள் இதற்கு—இந்தக் கேரளக் கிளர்ச்சிக்கு என்ன பெயர்களிடுகிறார்கள், தெரியுமா?

* பள்ளி சத்தியாக்கிரகம்,

* கேரள விடுதலைக் கிளர்ச்சி,

* அமைதியான கிளர்ச்சி

* அகிம்சாப் பூர்வமான கிளர்ச்சி!

என்ன செய்வது? கடந்த கால வாசனையாக இருக்கலாம். 1942 ஆகஸ்ட் 'சத்தியாகிரக'ப் போரில் தாம் நடந்து கொண்டதை எண்ணிப் பார்த்திருப்பார்கள்!

* தந்திக் கம்பியை அறுத்தல்!

* தபால் ஆபீசைக் கொளுத்தல்!

* இரயில் தண்டவாளங்களைப் பெயர்த்தல்!

* அதிகாரிகள் முகத்தில் அக்னித் திராவகத்தை ஊற்றல்!

இந்தச் 'சுதந்திர யாத்திரை'யின் நினைவுகள் வந்திருக்கும். காலத்திற்கும் வேகத்திற்கும் ஏற்றமாதிரி அதை கேரளாவில் பரீட்சித்துப் பார்க்கிறார்கள், அகிம்சாவாதிகள்.

சத்தியாக்கிரகத்தின் பெயரால் ரத்தக்களரி உண்டாக்கும் அவர்கள் அகிம்சை வாழ்க! வாழ்க!

அகிம்சா பரமோ தர்ம!

தி. மு. க: என்னப்பா காங்கிரஸ், என்ன கண்களெல்லாம் இப்படிச் சிவந்து கிடக்கின்றன, கோவைப்பழம் போல!

காங்கிரஸ்; பின்னே, என்ன? மலையாளத்திலே இந்தக் கம்யூனிஸ்ட்டுகள் செய்கிற அட்டகாசம், அப்பப்பா! ஒன்றும் சொல்ல முடியவில்லை; ஒரே தெருச்சண்டை; கத்திக்குத்து; அரிவாள் வெட்டு; துப்பாக்கிப் பிரயோகம்! நாடெல்லாம்

தி. மு. க: நண்பனே, தொழில்களையே தேசீயப்படுத்துவதற்கு ஆதரவு தரும் உங்கள் கட்சி — எங்கும் எதிலும் கொள்ளை, சுரண்டல் இருக்கக் கூடாது என்று பேசி வரும் உங்கள் கட்சி—கல்வியின் பெயரால் ஒரு குறிப்பிட்டவர்கள் கொள்ளையடித்துப் பணம் சேர்ப்பதை ஆதரிப்பது ஏன்?

காங்கிரஸ்: ....

தி. மு. க: கிறித்தவப் பாதிரிமார்

ஜனநாயகம் - சாகிறது! ஜாதிமத இருள் பரவுகிறது!!

எலும்பு மலை; இரத்த வெள்ளம்; பிணச்சேறு; பிணக்காடு!

தி. மு. க: அப்படியா?

காங்கிரங்; என்ன அப்படியான்னு கேட்கிறாய்? பத்திரிகை பார்ப்பதில்லையா? பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுகிறார்களே!

தி, மு. க: எந்தப் பத்திரிக்கைகளைக் கூறுகிறாய்? உங்கள் கட்சியின் ஆட்சியை ஆதரிக்கும் பத்திரிகைகள் தானே?

காங்கிரஸ்: இந்தாப்பா, நீ இந்த மாதிரியெல்லாம் வாதத்தைத் திருப்பாதே! கேரளத்தில் நடக்கும் படுகொலைகள் உனக்குத் தெரியாதா? அங்கு எழும் மரணப் புலம்பல் உன் காதுகளில் விழவில்லையா? ஐயோ... கேரளத்தில் ஜனநாயகம், கம்யூனிஸ்ட் கொடுங்கோலர்களின் கையில் சிக்கி அவதிப்படுகிறதப்பா. அது உனக்குத் தெரியவே தெரியாதா?

தி. மு. க: தெரியாது!

காங்கிரஸ்: தெரியாதா? அடப்பாவி! கம்யூனிஸ்ட்டுகள் கூட தேவலைபோலிருக்கிறதே; கேரளத்தில் கலவரமே நடக்கவில்லை என்று கூறுகிறாயா?

தி. மு. க: கலவரம் நடப்பது என்னவோ உண்மை; ஆனால் ஜனநாயகம் கம்யூனிஸ்ட்டுகளால் கொல்லப்படுவதற்குப்பதிலாக உங்களால்—காங்கிரசால் கொல்லப்படுகிறது.

காங்கிரஸ்: ஆமாம்; நீ எதைப் பேசினாலும்—எந்தப் பிரச்சினையைப் பேசினாலும் எல்லாப் பாரத்தையும் எங்கள் தலையில் போடத்தானே உனக்கு விருப்பம்?

தி. மு. க: அகில இந்தியாவிற்கும் ஒரே கட்சி—மிக மிகப் பெரிய கட்சி — செல்வாக்கு மிகுந்த கட்சி—நாட்டில் நடக்கின்ற எல்லாச்செயல்களுக்கும் மூல காரணக் கட்சி என்று உங்களால் புகழப்படும் உங்கள் கட்சியை நினைக்காமல் யாரையப்பா நினைப்பது? ஆட்சிப் பாரத்தைத் தாங்க மட்டும் ஆசை கொள்ளும் நீ, இந்த பாரத்தை ஏனப்பா தாங்க முடியவில்லை?

காங்கிரஸ்: ஆமாம். கேரளத்தில் ஜனநாயகத்தைக் காங்கிரஸ் தான் கொலைபுரிகிறது என்று சொன்னால் எனக்குக் கோபம் வராதா?

தி. மு. க: சரி, ஜனநாயகத்தைக் காங்கிரஸ் கைவிடவில்லை, ஜனநாயகப் பாதையில் அடிபிறழாமல் எப்படி நடக்கிறது என்பதைக் கொஞ்சம் சொல்லேன் பார்க்கலாம்!

காங்கிரஸ்: ஏன் காங்கிரசின் ஒவ்வொரு செயலும் ஜனநாயகச் செயல்தான்!

தி. மு. க; ஐந்து ஆண்டுகள் முடியாமலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சட்டசபையில் நிறைவேற்றாமலேயே, ஒரு அரசாங்கத்தை ராஜிநாமா செய்யச் சொல்லி கிளர்ச்சி நடத்துவதுதான் ஜனநாயகமா?

காங்கிரஸ்; பொது மக்களுக்குப் பிடிக்காத சர்க்கார் ஆட்சியிலிருக்கலாமா?—உலக சரித்திர ஏடுகளைப் புரட்டிப்பார்! மக்களின் எண்ணத்திற்கு மாறாக இருந்த மாமன்னர்களின் முடிகள் வெட்டுண்ட செவ்விளநீர்க்காய்களென ஓடியது உனக்குத் தெரியாதா? மக்களின் போக்கை அறியாது மனம் போனபடி ஆண்டவர்களின் மமதை அழிந்த கதையும், அவர்கள் மாண்ட கதையும் உனக்குத் தெரியாதா?

தி. மு. க: தெரியும்; உன்னைவிட நன்றாகத் தெரியும்.

காங்கிரஸ்: தெரிந்தும் ஏன் இப்படிப் பேசுகிறாய்?

தி. மு. க: பொறு நண்பனே! மக்களின் நம்பிக்கையைக் கேரள அரசாங்கம் எப்படி இழந்தது?

காங்கிரஸ்: ஆங்....அதுகொண்டு வந்த தகாத கல்விச் சட்டத்தால் மக்களின் மதிப்பை இழந்தது!

தி. மு. க: அந்தக் கல்விச் சட்டத்தால் நாட்டில் விளையும் தீமை என்ன?

காங்கிரஸ்: தீமையா....? தனியார்கள் பள்ளி பாதிக்கப்படுகின்றன.

தி. மு. க: யாரந்தத் தனியார்கள்?

காங்கிரஸ்: கத்தோலிக்கர்கள்! அவர்கள் கல்வி ஸ்தாபனத்தை நடத்தும் குருமார்கள்.

ஏ, தீர்மானமே; உன் கதி என்ன?

காங்கிரஸ் அமைச்சர் பக்தவத்சலம் முழங்குகிறார்!

"இந்த ராஜ்யத்தில் சிலர் தமிழருக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்!

"தமிழின் பெயரால் சுயநலத்தைத் தேடுகிறார்கள்!

"அதற்கும் மேலாகக் கட்சி நலத்தைத் தேடுகிறார்கள்!

"மக்கள் அவர்களுடைய பிரச்சாரத்தைக்கண்டு ஏமாறக் கூடாது!

"எங்கள் சர்க்கார் தமிழின் முன்னேற்றத்திற்காகப் பணி புரிகிறது!"

—இப்படிப்பேசியது எங்கே?

காங்கிரஸ் கட்சி கூட்டிய பொதுக் கூட்டத்திலா? இல்லை!

காங்கிரஸ் கட்சி மாநாட்டிலா? இல்லவே இல்லை!

பின்னர்........எங்கே பேசினார்?

திருச்செந்தூரில், வி. கே. ஆர். எஸ். ஜில்லாபோர்டு உயர்தரப் பாடசாலையில் ஐந்தாவது பாரத்தைத் திறந்து வைக்கும் போது!

ஐந்தாம் பாரத்தைத் திறந்து வைக்கும்போது மேலே கண்ட அறிவுரையை அமைச்சர் வழங்கியிருக்கிறார், மாணவர்களுக்கு!

மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்தக்கூடாது என்று 'ஜம்பமாக'த் தீர்மானத்தை(எல்லா அரசியல் கட்சிகளையும் கூட்டிப்) போட்டதும் இவர்கள் தான்!

அரசியலால் மாணவர்கள் படிப்பில் சிரத்தை செலுத்தமாட்டார்கள்; பின்னர் படிப்பின் தரம் குறையும், பிறகு இந்த நாடு அறியாமை இருளில் மூழ்கும்—என்ற அழகான காரணங்களைக் காட்டியதும் இவர்கள் தான்,

ஆனால், ஒரு உயர்தரப் பாடசாலையில்........ஐந்தாவது பாரத்தைத் திறந்த வைக்கும்போது.......கட்சி நலத்தைத் தேடும் வகையில் எதிர்க் கட்சிகளைத் தாக்குகிறார்; தம் கட்சி சர்க்காரின் சாதனைகளை அடித்துப்பேசுகிறார்!

இதன் மூலம் தங்கள் போட்ட தீர்மானத்திற்குத் தாங்களே தீ வைக்கிறார்கள்!

அந்தோ தீர்மானமே! உன் கதி இப்படியா ஆவது?

கள் நாகமலைக்காட்டுமிராண்டிகளைத் தூண்டிவிட்டுக் கலகம் நடத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டி 'கிறித்தவ மிஷனரிகள் தேசத்துரோகக் கும்பல்' என உங்கள் தலைவரால் வர்ணிக்கப்பட்ட அந்தக் கும்பலுடன் இப்போது கூட்டு ஏன் நண்பா? அந்த 'தேசத்துரோகக் கும்பல்'களின் நன்மைக்கு ஜனநாயகத்தைப் பலியிடுவது சரியா? உன் 'அகில இந்திய தேசீய'த்திற்குச் சற்றும் இளைக்காத 'தேசீய'த்தைக் கொண்ட கம்யூனிஸ்ட்டுகளை, தேசத் துரோகக்கும்பலுடன் சேர்ந்து கொண்டு எதிர்க்கலாமா? கல்விச் சட்டத்தால் ஏழை மக்களுக்கு என்ன நட்டம்? கூறு நண்பா!

காங்கிரஸ்: நீ என்ன சொன்னாலும் கம்யூனிஸ்ட்டுகள் பயங்கர ஆட்சி நடத்துகிறார்கள்!

தி.மு.க: கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சி பயங்கரம் என்றால் மற்ற மாநிலங்களில் நடக்கும் உங்கள் கட்சி ஆட்சியை என்னவென்று அழைப்பது? பயங்கரத்திலும் மா பயங்கர ஆட்சி என்பதா?

காங்கிரஸ்: 12 பிணங்களை கம்யூனிஸ்ட்டுகள் சுட்டு வீழ்த்தினார்கள்....

தி. மு, க; ....105 பிணங்கள் விழுந்தன, காங்கிரஸ் ஆளும் பம்பாயில்! 1956-க்குப் பிறகு உங்கள் 'அகிம்சாத் துப்பாக்கி' 700 தடவை சுட்டிருக்கிறதப்பனே! ஏன் இவைகளை மறைக்கிறாய்? சுடுவது தப்பு என்று கூறினால்முதலில் மற்றமாநிலங்களுள்ள உங்கள் கட்சி அரசாங்கத்தை ஏன் ராஜிநாமா செய்யச் சொல்லவில்லை?

காங்கிரஸ்: ....

தி.மு.க: மௌனம் ஏன் நண்பா? அரசாங்கத்தை ராஜிநாமாச் செய்யச் சொல்லத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருக்கிறதே? அடுத்து வரும் தேர்தல் இருக்கிறதே? மக்கள் மன்றம் இருக்கிறதே? இருநூறு ஆண்டுகள் அன்னியரின் ஆட்சியைச் சகித்த நீ, இன்னும் இரண்டு ஆண்டுகள் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியைப் பொறுக்கக் கூடாதா? அதைவிட்டுவிட்டு பிற்போக்குவாதிகளுடனும் மதவாதிகளுடனும் சேர்ந்துகொண்டு சொத்தைக் கருத்துகளுக்குப் போராடுவதேன்? ஜனநாயகக் குழந்தையின் குரல்வளையை ஒடிப்பதேன்? தவறான அரசியல் போராட்டத்திற்கு வித்திடுவதேன்? நண்பா, ஏன் அவசரமாகத் திரும்புகிறாய்? நில்; நண்பா, எங்கே ஓடுகிறாய்? ⁂

திரும்பிப் பாருங்கள் திருந்த வழியுண்டு

'21 வயதுக்குட்பட்டவர்கள் சினிமாப் பார்க்கக் கூடாது!'

இப்படி உபதேசித்தவர் யார்?

சிருங்கேரி சாரதா பீடத்துச் சங்கராச்சாரியரா?— இல்லை — காஞ்சி காமகோடி பீடத்துச் சங்கராச்சாரியரா?

அவர்கள் இவ்வளவு வரையறுத்துப் பேசமாட்டார்கள்! என்றால், பேசியவர் யார்? நம் ஆட்சிபீடத்து நிதிமந்திரி, சுப்பிரமணியம்தான்!

அப்படிப் பேசியதற்கு அவர் ஓர் அழகான காரணத்தை — அசைக்கமுடியாத உண்மையைக் காட்டுகிறார்:

'சினிமாக்களினால் இளைஞர்கள் கெட்டு விடுகிறார்கள்!'

யார் சுப்பிரமணியனாரா பேசியது? சேச்சே! அவர் அப்படிப் பேசமாட்டார்!—என்று கொஞ்ச காலமாக அவருடைய திரையுலகத் தொடர்பைக் கவனித்தவர்கள் இந்தச் செய்தியை ஒத்துக் கொள்ளவேமாட்டார்கள்,

● புதுப்பட ஆரம்ப விழாவில் காமிராவை முடுக்கிவிடுதல்.

● நூறாவது நாள் பாராட்டுக் கூட்டத்தில் தலைமை தாங்குதல்.

● நடிகர்களின் பாராட்டு விழாவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல்.

● ரசிகர்கள் சார்பில் சிறந்த நடிகர்களுக்குப் பாராட்டுப் பரிசு வழங்குதல்.

— இன்ன பிற 'அன்றாட ஸ்டுடியோச் செய்தி'களில் நீங்காத இடத்தைப் பெற்று வந்த அவர் இப்படிக் கூறுவது பலருக்கு ஆச்சரியமாகத் தானிருக்கும். இருந்தும் இனி என்ன செய்ய முடியும்? மனிதர் வாய் திறந்து கூறிவிட்டாரே!

இந்த அருமையான கருத்தை வெளியிடுவதற்கு முன் கொஞ்சம் நினைத்துப் பார்த்திருந்தால் போதும், அவரால் இதைக் கூறியிருக்கவே முடியாது. இளைஞர்கள் கெடுவதாகக் கூறும் ஆபாசக் காட்சிகளை வெட்டித் தள்ளத்தான் கூர் மழுங்காத தணிக்கைக் கமிட்டியின் கத்தரிக்கோல் இருக்கிறதே!

ஆள்வோர் வகுத்த சட்டத்தின்படி நல்ல கருத்துகளின் மேல் தாராளமாகப் பாயும் அந்தக் கத்தரி, ஆபாசத்தின்மீதும் பாய்ந்தால் ஆபாசம் வெளிவராது; இளைஞர் கெடமாட்டார்கள், அவர்கள் கொள்கைப்படி!

(ஆனால் அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வோம்; சினிமாவினாலேயே இளைஞர்கள் கெடுவதில்லை; பெண்வாடை படாது காக்கப்பட்ட ரிஷ்ய சிருங்கர் எனும் ரிஷிபுத்திரன் கெட்டுப் போனது சினிமாவினாலல்ல என்பதைப் புராணப் பிரியர்களான அவர்கள் உணரட்டும்!)

தீண்டத்தகாதது என நினைத்துச் சினிமாவைத் தாக்க வருவதற்கு முன் தங்களையே ஒருமுறை பார்த்துக் கொள்ளட்டும்!

● சினிமாக்களுக்கான ஜனாதிபதி பரிசுத் திட்டம்!

● சினிமா நடிகர்களுக்கு பத்மஸ்ரீ பட்டம் கொடுக்கும் திட்டம்!

● ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரப்புவதில் சினிமாவைப் பயன்படுத்தும் திட்டம்!

● 'மாட்டுப் பெட்டிக்கு ஓட்டு போடு' எனும் பிரச்சாரம் செய்ய அவர்களே சினிமா எடுத்த கதை!

● லட்ச ரூபாய்களைக் கொட்டி, கட்டப்பட்ட புது சட்டசபைக் கட்டிடத்தை குழந்தைகள் சினிமாத் தியேட்டராக்கிய கதை!

● போலீஸ் கடமைகளை விளக்க பிரபல சினிமா நடிகர்களைக் கொண்டு சினிமா தயாரிக்கப் போகும் திட்டம்!

— இவைகளை நினைத்துப் பாருங்கள்! உங்களுக்குள்ள அதிகாரங்களை ஆபாசங்களைத் தடுப்பதற்குள்ள வசதிகளை நினைத்துப் பாருங்கள்! சினிமாவின் முக்யத்வத்தை உணர்ந்து பாருங்கள்! (சுயநலப் பாதையில்தான் எங்கள் மூளை சிந்திக்குமென்று கூறினால்) உங்களுக்கும் சினிமாவுக்கும் உள்ள தொடர்பை நினைத்துப் பாருங்கள்!

பிறகு நீங்கள் '21 வயதிற்குட்பட்டவர்கள் சினிமாப் பார்க்கக் கூடாது'—என்று பேசமாட்டீர்கள்!

'21 வயதிற்குட்பட்டவர்களும் பார்க்கத் தகுந்த விதத்தில் சினிமாவை மாற்றியமைப்போம்'—என்ற நிலையுணர்ந்த பேச்சுத்தான உங்கள் பொன்னான வாயிலிருந்து உதிரும்!

* * *

பெற்ற மனம்

தமிழ்ப் பேராசிரியர் டாக்டர், மு. வரதராசனாரின் எழுத்தோவியமான பெற்றமனம் திரையோவியமாகும் பாதையில் வெகு வேகமாக நடைபோடுகிறது. சிவாஜி கணேசனும் இலட்சிய நடிகர் ராஜேந்திரனும் உடன் பிறந்தவர்களாக நடிக்கிறார்கள். நேஷனல் பிக்சர்சார் தயாரித்து வரும் இப்படத்தை இப்போது பீம்சிங் டைரக்ட் செய்கிறார்.

ஏ. வி. எம்மின் வெளிநாட்டுப் பயணம்

ஏ. வி. எம். பட நிலைய உரிமையாளர் ஏ. வி. மெய்யப்பன் சென்ற வாரம் வெளிநாட்டுப் பயணத்தைதுவங்கினார். அவரது மனைவியாரும் உடன் செல்கிறார்கள். கீழ்த்திசை சினிமா உலகிலேயே புகழ்பெற்ற ஜப்பான் நாட்டிற்கும், மற்றும் ஹாங்காங், ஹாலிவுட் நகரங்களுக்கும் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. சிக்கனத்தோடு அதே நேரத்தில் சிறப்பான முறையில் திரைப்படம் தயாரிக்கும் கலையில் வல்லவர்களான ஜப்பானியரின் முறை, திரு. மெய்யப்பன் திரும்பி வந்தவுடன் தமிழகத்துத் திரையுலகிற்குப் பயன்படும் என கலையுலகம் நம்புகிறது. மற்றும், அவருடைய உலகப் பயணமும், மற்ற நாடுகளில் அவருக்குக் கிடைக்கவிருக்கும் அனுபவங்களும் தமிழ்ப்படவுலகிற்குப் பயன்பட நாமும் வாழ்த்துகிறோம்.

தூங்காதே, தம்பி, தூங்காதே!

எம்ஜியார் திரைப்பட நிறுவனத்தார் தமது பிரம்மாண்டமான தயாரிப்பாகிய 'பொன்னியின் செல்வ'னோடு இன்னொரு தயாரிப்பு பற்றியும்அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தயாரிப்பு குழந்தைகளுக்கேற்றதொருதிரையோவியமாக இருக்குமாம்! குழந்தையுலகிற்குத் தேவையான கருத்துகளும், காட்சிகளுமடங்கிய அப்படத்தின் பெயர் 'தூங்காதே, தம்பி, தூங்காதே!' என்பதாகும்!

புரடக்ஷன் நெ. 7

அசோசியேட் புரொடக்ஷன்சாரின் 7-வது தயாரிப்பு திரையோவியமாக உருவாக்கப்பட்டு வருகிறது. பண்புள்ள பெண்டிர் பற்றிக் கூறும் அக்குடும்பப் படத்தின் ஆரம்ப விழா வாகினி படப்பிடிப்பு நிலையத்தில் துவங்கியது. 'முரசொலி' மாறன் திரைக்கதை வசனமெழுதும் இந்தப் படத்திற்கு கே. வி. மகாதேவன் இசையமைக்கிறார்! ஆதி. எம். இராணி ஒளிப்பதிவு செய்ய, யோகானந்த் இப் படத்தை டைரக்ட் செய்கிறார்.

குறள் விழா;

காரைக்குடி திருக்குறட் கழகத்தார் வருகிற 17, 18, 19 தேதிகளில் ஏழாம் ஆண்டு குறள் விழாவை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

முதல் நாள் 17-ந் தேதியன்று திருக்குறள் முனுசாமி தலைமை தாங்குகிறார். ஓவியக் கண்காட்சியை எஸ். வி. சகஸ்ரநாமம் திறந்து வைக்கிறார்.

அடுத்த நாள் விழாவுக்குப் பேராசிரியர் அ. சிதம்பரநாதன் தலைமை தாங்குகிறார்; பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., 'உலகத்து நூல்' என்னும் பொருள் பற்றிப் பேசுகிறார்.

19-ந் தேதி கவி அரங்கத்துக்குக் கவிஞர் கண்ணதாசன் தலைமை வகிக்கிறார். அரங்கில் கருணானந்தம், முடியரசன் முதலியோர் கலந்துகொள்கிறார்கள்.

அன்று மாலை நடைபெறும் விழாவுக்கு வழக்கறிஞர் வி. பி. இராமன் தலைமை தாங்க, தோழர் மு. கருணாநிதி "குறளோவியம்" என்பது பற்றிப் பேசுகிறார்.

அதே நாள் இரவு 9-30 மணிக்கு ஹரிராம் சேட் குழுவின் இன்னிசை இருக்கிறது.

நூலேணி

கவின் அச்சுக்கலை

ப. தருமர் பி. ஏ, ஏ. ஆர். பி. எஸ்.

பழைய காலத்தை யாராவது பார்க்க விரும்பினால், அச்சுக்கலைத் தொழிலை அழித்துவிட்டால் போதும்! இருண்டுபோன உலகவாழ்க்கை மீண்டும் திரும்புவதைக் காணலாம். அவ்வளவு தூரம் உலகத்தின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாக விளங்குவது அச்சுக் கலை!

அந்த அச்சுக்கலைகளுள் ஒன்றான கல் அச்சுக் கலை (லித்தோகிராபி) பற்றியும், ஒளி ஓவிய கல் அச்சுக்கலை (போட்டோ லித்தோ கிராபி) பற்றியும் அழகுத் தமிழில் கூறும் முதல் தமிழ் நூல்தான் 'கவின் அச்சுக்கலை' எனும் இந்நூல்.

அச்சுக்கலைத் தொழிலில் அனுபவம் பெற்றவரும், கல்லூரிப் பட்டம் தாங்கியவருமான திரு. ப. தருமர், பி. ஏ, இந்நூலை எழுத நல்ல தகுதியுடையவர். அனுபவமும், ஆங்கிலப் படிப்பும் சேர்ந்தால்தான் மேலைநாட்டுச் செல்வமாம் 'அச்சுக்கலை' தரங்குன்றாது தமிழில் கிடைக்கும்.

அம்மட்டோ, இந்நூலாசிரியரின் தமிழ் ஆர்வத்தினை அவர் பயன்படுத்தியிருக்கும் தனித் தமிழ்ச் சொற்களிலிருந்தும், ஆற்றொழுக்கான தமிழ் நடையிலிருந்தும் காணலாம்.

பலரின் மனதைக் கவர்ந்த ஓவியத்தின் எண்ணற்ற பிரதிகள் எடுக்கவும், வணிகத்துறையில் விளம்பரங்கள் செய்யவும், வணிக அடையாளங்கள் (லேபிள்) அச்சடிக்கவும் இந்த கல் அச்சுக்கலையும் அதன் வளர்ச்சியான ஒளி ஓவியகல்லச்சுக்கலையும் மிகவும்பயன்படுகின்றன.

இக் கலைக்குப் பயன்படும் ஒரு வகைச் சுண்ணம்புக் கற்களின் குணங்கள், குறைபாடுகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, கல் அச்சுக்கலைத் தொழிலை ஆசிரியர் விவரிக்கும் முறை எளிதாய், இனிமை நிறைந்ததாய், இருக்கிறது. அந்த அச்சுக்கலை சம்பந்தமுடையவர்கள் மட்டுமல்லாது எல்லோரும் படித்தின் புறத்தக்கவகையில் அமைந்திருக்கிறது.

ஆங்காங்கு விளக்கப் படங்களும், தேவையான ஆங்கிலச் சொற்களும், கணக்கு முறைகளும் புத்தகத்திற்கு மேலும் அணி செய்கின்றன.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்திடல்வேண்டும்'—என்ற தமிழ்க் கவியின் சொல் நிறைவேறி வருவதை இந்நூல் காட்டுகிறது.

அச்சுக்கலைத் தொழிலிலுள்ளவர்கள் கட்டாயம் வாங்கிப்படிப்பதோடல்லாமல் மற்றவர்களும் ஆதரவு தரவேண்டிய நூல்; பிழைகளை அலட்சியப்படுத்தி மறைக்காமல் பிழைதிருத்தம் போடப்பட்டிருப்பது புத்தகம் வெளியிட்டோரின் பண்பை வெளிக்காட்டுகிறது. பொதுவாக, இக் கவின் நூல் பாராட்டிற்குரியது; போற்றுதற்குரியது!

கிடைக்குமிடம் : கிராபிக் ரிபுரொடக்ஷன் சிண்டிகேட். மொ. சி. தெரு, சிவகாசி. விலை: ரூ. 9. பக்கங்கள் 272.

ரோமாபுரிப்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

இருங்கோவேளிடம் அரசி மெதுவாகப் பேச ஆரம்பித்தாள் இடையிடையே இருமிக் கொண்டே!

"உங்கள் தங்கை காட்டோரத்தில் ஒரு ஊமை வாலிபனைப் பார்த்தாளாம்..."

"அப்படியா?.......ம்.......அதற்கென்ன?"

"அந்த வாலிபன், கரிகாலனைப் பழிதீர்த்துக் கொள்வதற்காக அலைகிறானும்..."

இருங்கோவேளின் உள்ளத்தில் முதல் ஐய வினா உருவாயிற்று.

"ஊமை வாலிபன்!"

"கரிகாலனைப் பழிவாங்க அலைகிறான்!"

மாறிமாறி ஒலித்தன அரசியின் வார்த்தைகள்.

"பிறகு?"

—என்று ஆவலுக்குப் பதில் தேடினான் மன்னன்.

"உங்கள் தங்கைக்கு அவன் மீது ஏதாவது அன்பு பிறந்து விட்டதோ என்னவோ? அதுவும் எத்தகைய அன்போ எனக்குத் தெரியவில்லை. அந்த வாலிபனுக்கு நல்ல மருத்துவ முறைகள் தெரியுமாம். அவனை அழைத்துவந்தால் எனக்கு மருத்துவமும் செய்வான். உங்களுக்கும் கரிகாலனைப் பழி தீர்க்கும் விஷயத்தில் உதவியாக இருப்பான் என்று தாமரை என்னிடம் கூறினாள்—நான் அதெல்லாம் வேண்டாமென்று மறுத்துவிட்டேன்."

"ஏன் மறுத்தாய்? ... அந்த வாலிபன் பெயர் என்னவாம்?"

"முத்து என்று சொன்னாள்!"

"முத்து!" இருங்கோவேளின் உதடுகள் அசைந்தன.

"பெருந்தேவி! நல்ல மருத்துவன் என்றால் அழைத்துவரத் தடையேன் கூறினாய்?" என்று சொல்லிவிட்டுத் தங்கையைக் கூப்பிட்டு, "தாமரை! தாமரை! இங்கே வாயேன். பெருந்தேவியிடம் என்னமோ சொன்னாயாமே; நல்ல மருத்துவன் என்றால் அந்த ஊமை வாலிபனை அழைத்து வாயேன்—நல்லவன் தானே அவன்?" என்று பரபரப்புடன் கேட்டான் இருங்கோவேள்.

"ஆமண்ணா! நல்லவனாகத்தான் தெரிகிறது. அவனுக்குத் தெரியாத மூலிகைகளே இல்லையாம். நம்மைப் போல அவனும் சோழனுக்கு எதிரிதான்!"

—என்றாள் தாமரை சந்தோஷத்துடன்!

"மிகவும் இளம் வாலிபனோ?"

"வாலிபன்தான்!...."

"மீசை முளைத்த வாலிபனா?"

"முளைத்ததோ என்னவோ தெரியாது; மீசையில்லை முகத்தில்!"

"பெயர்?"

"முத்து!"

"சிவப்பு நிறமா?....கறுப்பு நிறமா?"

"சிவப்புத்தான்! என்ன அண்ணா இப்படிக் கேள்வி போடுகிறாய்? உனக்கு முன்னமே தெரியுமா அந்த வாலிபனை?"

"ஊஹூம்—தெரியாது! தெரியாது! சந்தேகத்திற்குக் கேட்டேன். நீ அவனை அழைத்து வந்து அரசிக்கு மருத்துவத்தைத் தொடங்கு. அதோடு ஒன்று--எதற்கும் நாம் ஜாக்ரதையாக இருப்போம். தப்பித்தவறி நான் இங்கே யிருப்பது அந்த ஊமை வாலிபனுக்குத் தெரிய வேண்டாம். இருங்கோவேள் மன்னன் எங்கேயோ ஓடிவிட்டதாகவே அவனிடம் சொல்லி வையுங்கள். நான் இங்கு வருவதாக இருந்தால் முகத்தை மாற்றிக் கொண்டுதான் வருவேன் உங்களைப் பார்க்க!"

"முகத்தை மாற்றிக்கொண்டென்றால், வேறு யாருடைய முகத்தையாவது வாங்கிவைத்துக் கொண்டா?"

—என சிரித்துக் கேட்டவாறு இரும ஆரம்பித்தாள் அரசி.

அவளைத் தழுவியவாறு மன்னன் புன்னகை புரிந்தான். அதைப் பார்க்க வெட்கி, தாமரை பலகணி வழியே வெளியே பார்க்கலானாள். பாதி கைதிகளுக்கு மேல் மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டார்கள்...மற்றவர்கள் துடித்துக் கொண்டு நின்றார்கள். செழியன் மட்டும் ஆடாது அசையாது நின்ற காட்சி தாமரையின் கவனத்தைக் கவர்ந்தது.

எங்கள்கட்சி ஏழைக்கட்சி

"எங்கள் கட்சி, காங்கிரஸ் கட்சி!

"எங்கள் கட்சி, ஏழைகள் கட்சி!

"பாரத் நாடு இது! பட்டினிச் சாவு ஆகாது!

"எங்கள் சோஷலிஸ பாணி சமுதாயம், ஏழைகளை வாழ்விக்கும் சமுதாயம்!

"கூட்டுறவுப் பண்ணைத் திட்டம், கும்பிகாய்ந்தவர்களுக்குக் கூழ்தரும் திட்டம்!

"அதனால் தான் ராஜாஜி ஆரம்பித்தார் முதலாளிகள் கட்சி!

"காங்கிரஸ் கட்சி, ஏழைகள் கட்சி!"

* * *

"ஆமாம், அதெல்லாம் சரி, சென்னை நகராட்சி மன்றத்தில் பணக்காரர்களுக்கென போடப்படும்—சொத்து வரியை நீங்கள் எதிர்த்தது ஏன்? ஏழைகள் கட்சி எதிர்க்கலாமா?"

"அதுவா?...ஹி....ஹிஹி....ஹி!"

கனகச்சிலை வேண்டாம்; கண்ணீர் நிற்கட்டும்!

சுதந்திர மோகம் கொண்டார் அவர்! அதன் பயன்? கொடுஞ்சிறை! சிறையிலே செக்கிழுத்தார்; செங்குருதி கொட்டினார். சிந்திய ரத்தமெல்லாம் சுதந்திரத் தாய் நடந்து வருவதற்கான பாதையிலே தெளிக்கப்படும் தூயநீர் என்றுதான் எண்ணினார்; இந்நாட்டின் நல்வாழ்விற்கு எதையும் அர்ப்பணிப்பேன் என ஆர்ப்பரித்தார்; மக்கள் மக்களென வாழ்வார்கள், அன்னிய ஆட்சி ஒழிந்தால்! —என நினைத்து தியாகம் பல புரிந்தார் அவர்!

நினைப்பிலே தப்பில்லாத அவர், வேறு யாருமில்லை!

வீர சிதம்பரனார்தான்; கப்பல் விட்ட தமிழர்தான்!

1957—அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்ப, காருண்ய காங்கிரஸ் ஆட்சி காமராசரை அனுப்பி அடிப்படைக்கல் நாட்டிற்று!

1959—அவருக்கு நினைவுச்சின்னம் எழுப்புவதற்கான முயற்சி என்ன கதியாயிற்று என்று பார்க்க மாணிக்கவேலரை இப்போது அனுப்பியுள்ளது!!

நாட்டின் நலத்திற்குழைத்த சிதம்பரனாரின் நினைவுச்சின்ன ஏற்பாடுகளைப் பார்க்கப்போன அவர், ஒட்டப்பிடாரத்திற்கருகிலுள்ள ஸ்ரீவைகுண்டத்து ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டார்!

* நோயாளிகள் படும் அவதியைக் கண்டார்!

* ஆஸ்பத்திரியில் இடமில்லாது அழுது தவிக்கும் நிலை கண்டார்!

* இந்நிலை நீடித்தால் மக்கள் மந்தையெனச் சாவார்கள் என்பதை 'லேசாக' உணர்ந்தார்!

"என்னவிருந்தாலும் ஒரு தாலுகாவின் தலைநகரான ஸ்ரீவைகுண்டத்திலே 10 படுக்கைகள் இருப்பது குறைபட வேண்டிய விஷயம்தான்!"

—என்று வாய்திறந்து கூறினார்!

10 படுக்கைகள்! — அதுகூட இல்லாத ஊர்களை அவர் அறியமாட்டார்!

—அந்த வசதிகூட அற்று மக்கள் மக்களென வாழாத நிலையை அவர் அறியமாட்டார்!

* யாருக்காக சிதம்பரனார் வாழ்வைத் தியாகம்செய்தாரோ அவர்கள் அந்த ஏழை மக்கள் நாயினும் கீழான வாழ்க்கையை சுதந்திரம் வந்த பின்னும் நடத்துவதை அவர் அறியமாட்டார்.

—மக்கள் மக்களென வாழ வசதியளிக்காத சுதந்திர ஆட்சி தரும் எந்த மரியாதையையும், காறியுமிழ்ந்து,எட்டியுதைத்திருப்பார், நினைவுச் சின்னத்திற்குரிய சிதம்பரனார்—என்பதையும் அமைச்சர் மாணிக்கவேலர் அறியமாட்டார்!

நாடாள்வோரே! நாடாள்வோரே! நடமாடியவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவது இருக்கட்டும்; நடமாடும். நாட்டின் சின்னங்களின் பால் உங்கள் பார்வை திரும்பட்டும்!

மனிதனின் கதை...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

கடைசி மன்னர் ஔரங்கசீப் தான்.

ஔரங்கசீப்பின் மரணத்துக்குப்பின் மகராஷ்டிரர்களின் கை ஓங்கியது. சிவாஜியின் சந்ததியினருக்குப் பிரதம மந்திரியாக இருந்த பீஷ்வாக்களின் தலைமையில் மகாராஷ்டிரர்கள் ஒன்று கூடினர். பீஷ்வாக்களில் பலம் பொருந்தியவராகத் திகழ்ந்த முதலாவது பாஜீராவ்; அவருடைய மைந்தன் பாலரஜி பாஜிராவ் ஆகியோரின் காலத்தில் மகராஷ்டிரர்கள் வலுப்பெற்ற இந்து சாம்ராஜ்யத்தை நிறுவுவதில் வெற்றி கண்டனர். பாலாஜியின் மைந்தரான முதலாவது மாதவராவ் காலத்தில் மகாராஷ்டிர ராஜ்யம் நிலையான அஸ்திவாரத்தில் உருப்பெற்றது.

மாதவி, இந்தக் காலத்துக்குப் பின், ஔரங்கசீப்பின் தவறான கோட்பாடுகளின் விளைவாக, இந்து—முஸ்லிம் பிணக்குகள் மலிந்தன. இந்திய உபகண்டம் ஒரு நாடாக உருப்பெற அக்பர் அளித்த வாய்ப்புக்கள் பயனற்றுப் போயின. வெவ்வேறு கலாச்சாரங்களையும், நாகரிகத்தையும், மதானுஷ்டானங்களையும். மொழிகளையும் கொண்டுள்ள பல்வேறு தேசீய இனங்கள். ஒரு நாடாக வாழ முடியாது என்கிற வரலாற்று உண்மை ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. இந்த நிலையில் தான் ஐரோப்பிய வியாபாரிகள் இந்த மண்ணில் வந்து இறங்கினர்.

வியாபார நோக்கோடு வந்தவர்களை இங்குள்ள சூழ்நிலை அரசியல் நோக்கு கொள்ளச் செய்தது. பிணக்குகளால் இந்தியத் துணைக் கண்டம் பிளவுபட்டு நிற்பதைக் கண்ட ஐரோப்பிய வியாபாரிகள் — குறிப்பாக பிரஞ்சு வியாபாரிகளும் ஆங்கில வியாபாரிகளும்—வியாபார உரிமைகளைத் தந்திரமாக வளர்த்துக் கொண்டதோடு. இங்குள்ள கோட்டை கொத்தளங்களில் தங்களுடைய கொடிகளைப் பறக்க விடும் ஆசை கொண்டனர். இதன் காரணமாக, இந்திய பூமி வேற்று நாட்டவரின் வேட்டைக் காடாயிற்று; இத்துணைக் கண்ட மக்கள் உரிமையிழந்தனர்;

அதற்குபின்...? சுவைமிக்க அந்த வரலாற்றைப் பின்னர் உனக்கு விரிவாக எழுதுவேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.